# இந்துசாதனம்

SUPPLEMENT TO THE HINDU ORGAN.

சோமவாரத்திலும், குருவாரத்திலும் பிரசுரமாகும்.

புத்தகம்—சஎ } யாழ்ப்பாணம்:— யுவஞு மாசிமீ அஉ (1936 பிப்ரவரி 20) வியாழக்கிழமை { இலக்கம்—அ௩


## நவீனக் கல்வி முறையின் குறைகள்

### தாய்ப்பாஷையின் மூலமாகக் கல்வியைப் பரப்ப வேண்டும்.

### கவி ரவீந்திரரின் அனுபவங்கள்.

(முற்றொடர்)

முற்காலத்தில் நம்முடைய பெரிய பண்டிதர்களின் மனோபாவத்திற்கும் கல்வியறிவு அறவே இல்லாத ஒரு கிராமவாசியின் மனோபாவத்திற்கும் வித்தியாசம் இல்லாமலே இருந்தது. சாஸ்திரீய முறையான வித்தையைக் கிராமவாசிகள் அதிக சுவையுடனும், பிரியத்துடனும் அனுபவிக்கத் தயாராயிருந்தனர். தங்களுடைய சக்திக்குத் தகுந்தாற்போல் அதில் அவர்கள் பங்கெடுத்துக் கொண்டனர். ஆனால் நம்முடைய மனமானது நவீன விஞ்ஞான முறையான அறிவில் அத்தகைய பாந்தவ்யத்தைக் கொள்ளவில்லை.

#### நூற்றுக்குப் பத்துப்பேர் கல்வியறிவாளிகள்.

இந்தியா ஒன்றில்தான் நூற்றுக்குப் பத்துப்பேரோ, எட்டுப்பேரோ மட்டும் கல்வியறிவைப் பெற்றிருக்கின்றனர். இத்தகைய தேசத்தில் ஆர்ப்பாட்டத்துடன் ஒரு கல்வி மகாநாட்டைக் கூட்டுவது வெட்கக்கேடான காரியமென்றே நான் சொல்லுவேன். ஆக்ஸ்போர்ட்டிலும் கேம்பிரிட்ஜிலும் சர்வகலாசாலைகள் இருக்கின்றன. இந்தியாவிலும் சில பாகங்களில் அவை இருக்கின்றன. இந்தியாவிலுள்ள சர்வகலாசாலைகளின் வெளித் தோற்றங்களைக் கொண்டு இங்கிலாந்திலுள்ள சர்வகலாசாலைகளும் இங்குள்ள சர்வகலாசாலைகளும் ஒன்றுதான் என்று நாம் நினைக்கிறோம். கட்டடங்களும் சாமக்கிரியைகளும் சர்வகலாசாலைகளாக மாட்டா. ஆக்ஸ்போர்ட்டிலும் கேம்பிரிட்ஜிலும் கட்டடங்களும் சாமக்கிரியைகளும் மட்டுமல்ல இங்கிலாந்தே அவற்றில் அடங்கியிருக்கின்றது. அதில்தான் உண்மையிருக்கிறது. நம்முடைய கலாசாலைகள் கட்டடங்களின் சுவர்களையே எல்லையாகக் கொண்டிருக்கின்றன. அவை பரிபக்குவமடையாதது அதற்குக் காரணமல்ல. ஒரு குழந்தை ஆரம்பத்தில் குட்டையாய் இருப்பதைப்பற்றி நமக்குக் கவலையில்லை. ஆனால் முழுமையும் வளருவதற்குச் சக்தியில்லாது இருக்கும்போது ஒருவன் போர்ச் சேவகர்களோடு உறவு கொண்டாடுவதென்றால் அது முடியாத காரியம்.

தங்களுடைய கவர்ன்மென்டோடு கல்வி முறையையும் நம் தேசத்திற்குக் கொண்டு வந்த பேல்காட்டார் கூடக் கட்டடங்களைக் கட்டி நம்மையும் ஏமாற்றிக் கொள்கின்றனர். மாத்திரத்தைத் தவிர்த்து வேறு நல்ல உபகரணத்தைக் கொண்டு நம்முடைய உடை வாள்களைச் செய்வதற்குப் போதுமான திரவியமில்லை யென்று நாம் போதிக்கப் படும்பொழுது இரும்பால் வாளுறையைச் செய்வது பணத்தை வீண்செலவு செய்வதாகாதா. அதைத்தான் நாம் இப்பொழுது ஆட்சேபிக்கிறோம். நம்முடைய கீழ் நாட்டுக்குரிய சொல்லைப்படி அமுதத்தைக் கொண்ட பாத்திரம் அமுதம் போன்று மேன்மை படைத்துச் சிரேட்டமாக இருக்க வேண்டுமென்பது அவசியமில்லையாகும். அது போன்று அறிவை அமுதத்தை மரப், செங்கல் வேலை, முதலிய வற்றின் பரிமாணத்தைக் கொண்டு மதிப்பிடுவது என்றால் அதை நாம் மனதில்கூட நினைக்க முடியாததாக இருக்கிறது.

#### மாணவர்களின் பலதினிசு

உபாத்தியாயத் தொழில் புரிந்திருக்கிறவர்களில் சில தினிசு மாணவர்கள் ஒரு நாளும் பாஷைகளில் தேர்ச்சிபெற முடியாத தென்பதை உணர்வார்கள்; ஆங்கிலத்தில் அரைகுறையான ஞானத்தைக் கொண்டு எவ்விதமாகவோ அவர்கள் மற்றிகுலேஷன் பரீட்சையில் தேர்ந்து விட்டாலும், பின்னிட்டு அதற்கு மேல் கலாசாலைக்குரிய முன்னேற்றத்தை அவர்கள் அடைவது அசாத்தியம். இதற்குப் பல காரணங்கள் உள. வங்காளிகளுக்குத் தாய்ப்பாஷையாக இருக்கிறதோ அவர் ஆங்கிலத்தைக் கற்றுக் கொள்வது மிகக் கஷ்டப் படுகிறார்.

ஏழைகளான மாணவர்கள் திறமையுள்ள ஒருவரிடம் ஆங்கிலபாடத்தைக் கற்றுக் கொள்ள முடியாதவர்களாய் இருக்கிறார்கள். பரீட்சையில் தேறுகிறவர்களின் விதியை நினைத்து மட்டும் நான் துக்கப்படவில்லை. பரீட்சையில் தேறாமல் இருப்பவர்களைப் பற்றியும் நான் அதிகமாகத் துக்கப் படுகிறேன். இவர்களுடைய அறிவைச்சோதிப்பதற்குத் தகுந்த மார்க்கமில்லையா?

நம்முடைய தேசத்திற்கும் சுதந்திரமுள்ள மற்றொரு தேசத்திற்கும் பெரிய வித்தியாசமிருக்கிறது. சுதந்திரமுள்ள தேசத்தில் கல்வியைப் பூர்த்தி செய்யும் பொருட்டுத்தான் ஒருவன் அந்நிய பாஷையைக் கற்றுக் கொள்கிறான். அவர்களுடைய அன்றாட அலுவல்களுக்கு அப்பாஷை அத்தியாவசியமில்லை. ஏனெனில் தேசத்தின் சகல நடவடிக்கைகளும் அதனுடைய சொந்த

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

## சாவகச்சேரிச் சந்தை

### குத்தகைகாரன் அக்கிரமம்.?

### மாகாணத்தலைவர்கவனத்திற்கு

இந்துசாதனப் பத்திராதிபர்

அவர்களுக்கு:—

ஐயா,

யாழ்ப்பாணம் பெரிய கடை "மார்க்கட்டு" விஷயமாக இற்றைக்குச் சில நாட்களுக்கு முன் வெளியான ஓர் கடிதத்தையும் அதனைப் பற்றித் தாங்கள் ஒருமுறைக்கு இருமுறை எழுதிய குறிப்புக்களையும், அதன் பயனாக அம் மார்க்கட்டினை உபயோகிக்கும் ஏழைச் சனங்கள் அடைந்துள்ள நன்மைகளையும் கண்டு தங்களுக்கு ஏழைகள் சார்பாக என் வணக்கத்தைச் சமர்ப்பிக்கின்றேன். யாழ்ப்பாணம் மார்க்கட்டு விஷயமாக ஏழைச் சனங்களுக்குத் தாங்கள் புரிந்த உதவியோ சாலப் பெரிது! பெரிது! அதுபோன்ற உதவியை இத் தென்மராட்சிப் பகுதியில் வதியும் என்போன்ற ஏழைச் சனங்களுக்குப் புரியுமாறு தங்களை மிக்க விநயத்துடன் வேண்டிக் கொள்ளுகிறேன்.

ஐயா,

எமது சாவகச் சேரிச்சந்தை செவ்வாய், வியாழன், சனி என்னும் 3 தினங்களிலும் கூடுவது வழக்கம். இத் தினங்களில் தென்மராட்சிப் பகுதியில் உள்ள ஏழைச் சனங்கள் பலர் தங்களுக்குரிய எதும் பொருள் பண்டங்களை இங்கு கொண்டு வந்து விற்று அதனால் வரும் அற்ப ஊதியத்தைக் கொண்டு தம் நோக்கங்களை ஒருவாறு நிறைவேற்றிக் குடிக்கின்றனர். ஆனால் இம் முறை இச் சந்தையைக் குத்தகைக் கெடுத்திருக்கும் பிரபுவுக்கு ஏழைச்சனங்கள் நல்லாயிருப்பது விருப்ப மில்லைப் போலும்! வெந்த வீட்டிற் பிடுங்கினது மிச்சம் என்றுக்கு இந்த ஏழைச்சனங்களிடம் அகப்பட்டதைச் சுருட்டுவதிற் கண்ணும் கருத்துமாயிருக்கிறார் என்பதை யான் ரூசுப் படுத்தத் தயாராயிருக்கிறேன்.

இவர் பிரமாணத்துக்கு மாறாகக் குத்தகைப் பணம் பெறுகின்றாரா? 'போமிற்' பத்திரம் இற்றைவரை சந்தையில் வியாபாரம் செய்வோர்க்கு அளித்திருக் கின்றாரா? அறவிடும் பணத்திற்குப் பற்றுச் சீட்டுக் கொடுத்திருக்கின்றனரா? என்றின்னோரன்னவற்றை இவரிடம் கேட்பதுயார்? இவர் சட்ட விரோதமாகப் பணம் பெறுவதோடமையாது, கிழங்கு, காய்கனிகள் விற்கும் ஏழைப் பெண்களிடம் இருந்து சந்தை முடிவில் அப் பொருள்களில் ஓர் பாகமும் பெறுவது மெய்யா பொய்யா? இவர் சட்ட விரோதமாக நடக்கின்றார் என்பதை ஏழைச் சனங்கள் அறிவர்; ஆனால் பாவம், அவர்கள் வாயில்லாப் பிராணிகள் போல் மவுனம் சாதிக்கின்றனர். நியாயங்கேட்டால் குத்தகைக்காரன் யதேச்சாதிகாரத் தர்பார் புரிந்தால் அவ்வேழைகளால் என்ன செய்ய முடியும்?

ஐயா, இவற்றைக் கேட்பவர் இல்லையா? நாம் ஆரோடு நோவேம், ஆர்க் கெடுத் துரைப்பேம்! எம்மை ஆளும் மாகாணத் தலைவர் மிஸ்டர் E. T. டைசன் துரையே எம் குறையைத் தீர்க்க முன்வர வேண்டும் ஏழைப்பங்காளராகிய தாங்களும் எம் பொருட்டுப் பாடுபட வேண்டும். எமக்கு வேறுகதியில்லை.

எமது மாகாணத் தலைவரே இச் சந்தையின் பரிபாலனத்திற்குப் பொறுப்பாளியாவர் என்று நினைக்கின்றேன்: அன்னவர் பரிபாலனத்தின்கீழ் எம் நாட்டு ஏழைகள் சுபிட்சம் அடைந்திருக்கும் இக்காலத்தில்—சுன்னாகச் சந்தையில் நல் முன்மாதிரி ஏற் பட்டிருக்கும் இச்சமயத்தில்—இச் சாவகச்சேரிச் சந்தை ஏழைகள் துன்புறுதல் அழகல்ல என்பதை மாத்திரம் கூறி இத்துடன் இதனை முடிக்கிறேன்.

இங்ஙனம்

டிெ சந்தை வியாபாரியாகும் ஏழை

சாவகச்சேரி

17 – 2 – 36.

## சிவராத்திரி விரதம்.

[ஓர் சைவாபிமானி வரைவது]

பரிபூரண சச்சிதானந்தப் பிழம்பாய், முத்தராய், சுத்தசாட்குண்ணியராய், சிருஷ்டித்திதி சங்கார திரோபவானுக்கிரக கர்த்தாவாய், நித்திய வியாபக நிஷ்காளாதீதராய், அநாதி பெத்தராகிய ஆன்மாக்களை ஈடேற்றுவான் கருதி, தமது சத்தியென்னும் கருவியைக் கொண்டே அவர்களுக்கு அருளும் இயல்பினனாயுள்ள சிவபெருமானைக் குறித்து அனுஷ்டிக்கும் விரதங்களுள்ளே நனி சிறந்தது "சிவராத்திரி விரதமே" யென்க.

இச் சிவராத்திரி ஐந்து வகைப்படும். சோமவாரத்தில் அமாவாசை நிகழுமாயின் அது யோக சிவராத்திரியாம் அமாபட்சத்துச் சதுர்த்தசி சோமவாரஇரவில் நான்கு சாமங்களிலும் தொடர்ந்திருக்குமானால் அதுவும் யோக சிவராத்திரியாம்.

பன்னிரு மாதங்களிலும்வருகின்ற பூர்வ அபரபட்ச சதுர்த்தசிகளில் நிகழ்வது நித்திய சிவராத்திரியாம்.

மாதந்தோறும் அபரபட்சத்தில் வரும் சதுர்த்தசியில் மாத்திரம் அனுட்டித்தல் மாதசிவராத்திரியாம்.

தை மாசத்து அபரபக்கப் பிரதமை தொடக்கம் திரயோதசிவரையுமுள்ள பதின்மூன்று நாட்களிலும் ஒருவேளை உணவருந்தி, சதுர்த்தசியன்று உபவாசமிருந்து அடுத்த தினம் பாரணஞ் செய்து அனுஷ்டிக்கப்படுவது பக்ஷ சிவராத்திரியாம்.

மாசி மாதத்து கிருஷ்ணபக்கச் சதுர்த்தசியிலே நிகழ்வது மகா சிவராத்திரியாம்.

மாசிமாசத்தில் செவ்வாய்க்கிழமையிலேனும் ஞாயிற்றுக்கிழமையிலேனும் சிவராத்திரி நிகழுமாயின் அஃது மூன்றுகோடி சிவராத்திரிக்குச் சமமாம்.

அந்திக்காலம் வரையும் திரயோதசியானது நின்று அதன்பின்பு சதுர்த்தசி கூடப்பெற்று மற்றைப் பகல்முழுதும் நிற்கியிடில் அஃது உத்தமோத்தம சிவராத்திரியாம். சூரியன் அஸ்தமித்தபின் கூடுஞ் சதுர்த்தசியானது உத்தம சிவராத்திரியாம். சூரியன் அஸ்தமிக்கச் சிறிது நேரத்தின்முன் கூடுஞ் சதுர்த்தசி மத்திம சிவராத்திரியாம். இரவிலிருந்து நாழிகை வரையும் சதுர்த்தசி நின்றுவிட்டால் பின்னர் அமாவாசை தொடங்குமாகில் அஃது அதமசிவராத்திரியாம்.

யாம் சிவராத்திரி தினத்தில், நான்கு சாமங்களிலும் சிவபெருமானை ஆகம நான்முறை வழுவாது பூசித்தல் வேண்டும். அஃதெவ்வாறெனக் கூறுதும்.

முதற்றிதியாகிய திரயோதசியில் ஒருபொழுதுமாத்திரம் உணவுட்கொண்டு மனையாடோள் சோராது அன்றிரவைக் கழித்து வைகறையில் நித்திரைவிட்டெழுந்து நித்திய கருமம் முடித்து சிவாலயத்திற்குச் சென்று சிவபிரானை வழிபட்டு வீட்டிற்கு வந்து உச்சிக்காலத்தில் ஸ்நானஞ் செய்து அனுட்டானம் முடித்து சிவபிரானைத் தியானித்துக்கொண்டிருந்து சாயுங்கால மானதும் ஸ்நானஞ் செய்து பஞ்சப்புலன்களையுமடக்கி, முதற்சாமத்தில் சிவலிங்கப்பெருமானுக்கு பஞ்சகௌவியத்தினலபிஷேகஞ் செய்து, சந்தனஞ் சாத்தி முற்காவன்னத்தை நிவேதித்து வில்வத்தினலர்ச்சித்தல் வேண்டும். இரண்டாஞ் சாமத்தில் பஞ்சாமிர்தத்தாலபிடேகித்து அகிற்குழம்பு சாத்தி பாயசான்னத்தை நிவேதித்து தாமரையால் அர்ச்சித்தல் வேண்டும். மூன்றாஞ்சாமத்தில் தேனாலபிஷேகஞ் செய்து கருப்பூரப்பெட்டி சாத்தி, திலான்னத்தை நிவேதித்து சண்பகமலரா லர்ச்சித்தல் வேண்டும். நான்காம் சாமத்தில் கன்னற் சாற்றினாலபிஷேகஞ்செய்து குங்குமஞ் சாத்தி, சுத்தான்னத்தை நிவேதித்து நந்தியாவர்த்தம்பூவாலர்ச்சித்தல் வேண்டும். நான்கு சாமங்களிலும் முறையே நான்கு வேதங்களையும் ஓதல் வேண்டும். நான்கு சாமங்களிலும் பஞ்சவில்வங்களாலும் அர்ச்சனை செய்யலாம்.

மேற்கூறியாங்கு விரதத்தை அனுட்டித்து புலரிக்காலத்தில் செய்யவேண்டிய கிரியைகளைச் செய்து சிவபிரானை நமஸ்கரித்து அந்தணர்களுக்கு ஆடை, அன்னம் முதலியவற்றைத் தானமாகக் கொடுத்து; சூரியன் உதித்து 6 நாழிகைக்குள் பாரணஞ் செய்தல் வேண்டும். அன்றுபகல் நித்திரை செய்தல் கூடாது. நித்திரை செய்வோர், நூறு அந்தணரைக் கொலைசெய்த பாவத்தை யடைவர்.

பாரணந்தான்புரிந்ததப்பின்பகற்பொழுதிற்
சோம்பொடுகண்படைசெய்தாரேல்
லாரணங்கள்பயின்றதலவந்தணரைம்
பதிற்றிட்டியாயிரரைக்
காரணங்களொன்றுமின்றிக்கொன்றகடும்
பழியடைவர்கருதுஞ்சாந்தி
போனக்கிலோமமறைவிதிப்படியே
புரியிலந்தப்பிழைபோமன்றே.
—(சிவராத்திரிபுராணம், சிவராத்திரி மான்மியச்சருக்கம் செ. ௬௬.)

சிவராத்திரி காலத்தில் தண்ணீர் பருகுதல் உத்தமம், பால் பருகுதல் மத்திமம், பழம் முதலியவை உண்ணுதல் அதமம். உபவாசம் உத்தமோத்தமம். சிவபூசைசெய்ய இயலாதவர்கள்போசனமின்றியும் நான்கு சாமங்களிலும் சிவபுராணங்களைக்கேட்டும், அஞ்சொழுத்தை நெஞ்சழுத்தியும் அரனைச் சேவித்தல் வேண்டும். மேலே கூறியவாறு இவ்விரதத்தை இருபத்துநாலு வருடம் அனுஷ்டித்து உத்தியாபனம் செய்தல் வேண்டும்.

# பாலர்பகுதி.

எனது அன்புமிக்க
மருமக்களே!

சென்றமுறை இந்தியக்காங்கிரஸ் மகாசபையைப்பற்றிக் கொஞ்சம் சொல்லித்தந்தேன் அல்லவா? இன்னும் கேளுங்கள்:

காங்கிரசிற் சேர்ந்தவர்கள் இந்தியாவுக்கு இன்ன இன்ன வேண்டும் என்று வெள்ளைக்காரரைக் கேட்டுப் பார்த்தார்கள்; ஆனால் வாய்க்கவில்லை. "மயிலே, மயிலே உன் இறகில் ஒன்றுதா மருந்துக்கு" என்று கேட்டால், இரந்தால்; மயில் தனது இறகைத் தருமா? ஒருபோதும் தரமாட்டாது; அதனைப் பிடித்து அமர்த்திப் பிடுங்கினால்தான் இறகைப் பெறலாம்.

இப்படியான காலத்திலே, மோகனதாஸ் கரம்சந் காந்தி என்பவர் இந்தக் காங்கிரசில் சேர்ந்தார். மருமக்களே, இவரைத்தான் மகாத்மா காந்தி என்று எல்லாரும் அழைப்பார்கள். இவர் ஓர் பெரிய மகான்; இங்கிலாந்தில் ஆங்கிலக் கல்வி கற்றுப் பரிஸ்ரர் (அப்புக்காத்து) பரீட்சையில் சித்திபெற்றவர்; கனவிலும் பொய்சொல்லாதவர்; இதோ அவரது படம் இருக்கிறது பாருங்கள்.



மகாத்மாகாந்தி காங்கிரஸில் சேர்ந்த முதல் அதற்கு ஓர் புதிய பலம் ஏற்பட்டது; இந்தியாவில் உள்ள ஹிந்துக்கள், முஸ்லீம்கள், பார்சிகர் முதலானோர் யாவரையும் மகாத்மா காந்தியவர்கள் ஒன்றுகூட்டினர்; இந்திய தேசம் எம்முடையது; அதில் அந்நியர் ஆட்சிசெய்யவொண்ணாது என்று இந்தியாவில் வசிக்கும் பல சாதியாரும் எண்ணத் தொடங்கி ஒற்றுமைப்பட்டார்கள்.

மகாத்மாகாந்தி, இந்தியர்க்குள்ளே ஒற்றுமையை உண்டாக்கினதுடன் மாத்திரம் நிற்கவில்லை; வெள்ளைக்காரரிடம் இருந்து தாம் சுயராச்சியம் கேட்பதற்கு முன், பல பிரதானமான காரியங்களில் ஈடுபட்டார்; அவை என்னென்னவென்று சொல்லித்தருகிறேன் கேளுங்கள்:

## தீண்டாமை.

எனது அருமை மருமக்களே: நாங்கள் எல்லாரும் ஒரே கடவுளின் புத்திரர்கள்தான்; எங்களெல்லோரையும் படைத்தவர் ஒரு கடவுள் தான்; ஆகவே எமக்குள்ளே உயர்வுதாழ்வு இல்லை; உலகத்திலேயுள்ள ஒவ்வொருவனும் ஒவ்வோர் பிழைப்புச் செய்யவேண்டும். ஒருவன் உத்தியோகம் பார்க்கவேண்டும்; ஒருவன் கமம்செய்யவேண்டும், ஒருவன் மேசன் வேலைபார்க்கவேண்டும், ஒருவன் மரமேறித் தேங்காய் பிடுங்கவேண்டும், ஒருவன் கள்ளுச்சேர்க்கவேண்டும், ஒருவன் விறகு கொத்தவேண்டும், ஒருவன் கோவிலிலே பூசைசெய்யவேண்டும்; எல்லோரும் ஒரே பிழைப்பைச் செய்யமுடியுமா? உதாரணமாக, நாங்கள் எல்லோரும் கோவிலிற் பூசைசெய்ய முடியுமா? அப்படியானால் எங்கள் எல்லோர்க்கும் போதுமான கோவில்கள் உண்டா? நாங்கள் எல்லாரும் பூசைசெய்தால் கோவிலில் வந்து சுவாமியைக் கும்பிடுவது யார்? இப்படித்தான் எல்லாத் தொழில்களும்; ஒவ்வொருவரும் ஒவ்வொரு தொழிலைச் செய்தாற்றான் உலகம் நடைபெறும், இல்லையா? தொழில்கருதி ஒருவனை உயர்ந்தவன் என்றும், இன்னொருவனைத் தாழ்ந்தவன் என்றும் கூறுதல் பாவம்; ஆனால் இந்த உண்மையை இங்கேயுள்ளாரும், இந்தியாவில் வாழ்பவரும் அறியவில்லை, நாமும் இந்தியரும் எங்களுக்குள்ளே உயர்வு தாழ்வு என்ற பேதங்




கள் பாராட்டினோம்; மரமேறுபவர்களையும் மற்றும் சிலரையும் நாங்கள் தாழ்ந்தவர் என்று கருதி அழைத்துவந்தோம்; அவர்களை நாய்போல நடத்திவந்தோம்; அவர்களுடன சமமாய் இருக்கமாட்டோம என்றோம்; அவர்கள் எமது கிணற்றில் தண்ணீர் அள்ளவும் விடுகிறோம் இல்லை; கேவலமான காகம் எமது கிணற்றுக்குள்ளே எச்சமிட்டால் அதனை நாம் பொருட்படுத்தாது விடுகின்றோம்; ஆனால் எமது கடவுளின் புத்திரரும், எம்மைப்போல அவயம், இரத்தம், எலும்பு உணர்ச்சியுடைய ஒருவன் அக்கிணற்றில் தொட்டால் அவனை வெருட்டுகின்றோம்; அடிக்கின்றோம்; உதைக்கின்றோம். இதுயாத்திரமா? எமது கோவில்களில் கடவுள் இருக்கிறார்;

ஆனால் அவரை வழிபடவும் நாம் அவரின் புதல்வரை விடுகின்றோம இல்லை; அந்தோ! எமக்குள்ளே தான் எமது அறியாமையினால் உயர்வு தாழ்வு என்ற பேதம் பாராட்டுகின்றோம்; ஈசன் சந்நிதியிலும் உயர்வு தாழ்வு உண்டா? கடவுளோ சர்வ கருணையாழி; சர்வசிவ தயாபரர்; அவர்க்கு எல்லாரும்சரிதான்.

இப்படி நாங்கள் எமக்குள்ளே உயர்வு தாழ்வு பாராட்டுவதால் யாருக்கு நட்டம் சொல்லுங்கள்! எமக்குத்தான். ஒருகாலத்திலே எமது நாட்டிலே கிறிஸ்தவரில்லை; இப்போது லட்சக்கணக்கானவர்கள் இருக்கின்றார்கள்; இவர்களிற் பெரும்பாலர் யார் என்பது உங்களுக்குத் தெரியுமா? எம்மால் ஒதுக்கப்பட்ட தாழ்ந்தவர்களே அதிகமாகக் கிறிஸ்துவமதத்திற் சேர்ந்திருக்கிறார்கள்; ஹிந்து சமயத்தைப் பார்க்கிலும் கிறிஸ்துவ சமயம்தான் நல்லது; கிறிஸ்துவ சமயத்தினால்தான் மோட்சத்துக்குச் செல்லலாம் என்று நினைத்தபடியால் இவர்கள் கிறிஸ்தவர்களாகிவிடவில்லை; ஹிந்துசமயத்தில் இருந்தால், எப்போதும் தம்மைத் தாழ்ந்தவராக்கியே விடுவார்கள் என்ற எண்ணத்தினாலேயே அவர்கள் கிறிஸ்துவ சமயத்திற் சேர்ந்தார்கள்; அத்துடன் கிறிஸ்துவ பாதிரிமாரும், குருமாரும இந்த ஏழைத் தாழ்ந்தவர்களை நோக்கி, "நீங்கள் எங்கள் சமயத்திற்கு வந்தால், உங்களை உயர்ந்தவராக்கிவிடுவோம்; உங்கள் பிள்ளைகளைப் படிப்பிக்கின்றோம்; அவர்களுக்கு வேளாளப் பிள்ளைகளைப்போல உத்தியோகம் பெற்றுக்கொடுக்கிறோம்; உங்களையும் எங்கள் தேவாலயங்களுக்குள்ளே விடுகிறோம்; உங்களை எங்கள் வீட்டிற்குள்ளே விடுகிறோம்; தண்ணீரையுமள்ள விடுகிறோம்" என்றார்கள்; அத்துடன் பணமும் கொடுத்தார்கள். இப்பயன்களைக் கண்டவுடன் தாழ்ந்த சாதியாரில் அநேகர் கிறிஸ்துவ மதத்தைக் கைக்கொண்டனர்.

கிறிஸ்துவப் பாதிரிமாரும் குருமாரும் அளித்த இந்த நன்மைகளை நாமும் எமது நாட்டில் வசித்த தீண்டாச்சாதியார்க்குக் கொடுத்திருந்தால் அவர்கள் எமது சமயத்தை விட்டு வேறு சமயத்திற்குச் சென்றிருப்பார்களோ? எனது அருமை மருமக்களே, நீங்களே கூறுங்கள்.

இவற்றையெல்லாம் மகாத்மா காந்தி சிந்தித்தார்; அவர் தமமுடைய நாட்டவரை நோக்கிச் சொன்னார்: "என்னுடைய அருமைச் சகோதரர்களே, இந்தியாவிலுள்ள யாவரும் சகோதரர்கள்தான்; நாம் எமக்குள்ளே உயர்வு தாழ்வு காட்டவொண்ணாது; நாம் தீண்டாமையைப் போக்கவேண்டும; ஒற்றுமைப்படவேண்டும்; அப்போது தான் பலம் உள்ளவராய் இருப்போம்; நாம் பலம் உள்ளவராயிருந்தால், வெள்ளைக்காரர் எமது பலத்தைக்கண்டு அஞ்சுவார்கள்."

மகாத்மா இத்துடன்நிற்கவில்லை; அவர் தீண்டாதாரையும் நோக்கிப் பின்வருமாறு புத்தி புகட்டுவாராயினார்: "எனது அன்புமிக்க சகோதரரே! உங்களை மற்றவர்கள் ஒதுக்குவதையிட்டுத் துயரப்படவேண்டாம; உங்களை மற்றவர்கள் புறக்கணிப்பதற்கு நீங்களும் காரணமாயிருக்கிறீர்கள்; நீங்கள் சுத்தமாயிருக்கவேண்டும்; ஒவ்வொருநாளும் ஸ்நானம் செய்தல்வேண்டும்; உயிர்களைக் கொன்று தின்னவொண்ணாது; கள்ளுக் குடிக்கவொண்ணாது; உங்கள் வீடுவாசல்களைச் சுத்தமாய் வைத்திருக்க வேண்டும்; உங்கள் பிள்ளைகளுக்குக் கல்வி கற்பிக்கவேண்டும; நீங்கள் ஆண்மையுள்ளவர்களாயிருத்தல்வேண்டும்; அடிமைப் புத்தி பிடித்தவர்களாயிருக்கவொண்ணாது; சத்தியத்தைக் கைக்கொண்டு நடத்தல் வேண்டும்; மற்றவர்களுக்குப் பயந்து நடக்கவொண்ணாது; இப்படியெல்லாம செய்தால் நீங்கள் முன்னேறுவீர்கள்; உங்களை மற்றவர்களும் கண்ணியப்படுத்தி வருவார்கள்."

மகாத்மா காந்தியடிகள் இந்தியாவிற்குச் சுயராச்சியம் பெற்றுக்கொடுப்பதற்குச் செய்த முதல்வேலையிதுவே; தீண்டாமையைப் போக்குதற்கு அவர் அரும்பாடுபட்டு வருகிறார்; அவருடைய போதனைகளை இந்தியர் கேட்டு அதன்படி ஒழுக முயற்சித்தனர்; அதன் பயனாக இப்போது அங்கே நீண்டாமை—அதாவது உயர்வுதாழ்வு—என்ற வித்தியாசம் அவ்வளவாக இல்லை.

அடுத்ததாக மகாத்மா காந்தி என்னசெய்தார் என்பதைப் பற்றி அடுத்தமுறை சொல்லித் தருகின்றேன்.

எனது அருமை மருமக்களே!

இனி எமது சங்கத்தில் புதிதாக மருமக்கள் சேர்வதற்கானபகுதியை இதோ வெளியிடுகின்றேன்: எனது அருமை மருமக்கள் புதிய அங்கத்தவர்களைச் சேர்த்து அனுப்பவேண்டும்; எங்கே பார்க்கலாம்; எமது பாலர்சங்கம் இனிமேல் முன்போல நன்னிலைமைக்குவர எம்பெருமான் திருவருள் செய்வாராக.

"சுப்புமாமா" அவர்களே,
தலைவர், இந்துசாதனப் பாலர்சங்கம்,
யாழ்ப்பாணம்.

மாமா,
தயவுசெய்து என்னையும் தங்கள் சங்கத்திற் சேர்த்துக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன். நான் அவ்வொழுங்கும் அவ்வொழுங்கிலிருந்த காரியமாகவும் செய்வேன்.

பெயர் ........................................

வயது ........................................

படிக்கும் வகுப்பு ........................................

உபாத்தியாயரின் பெயர் ........................................

இங்ஙனம்
உங்கள் வாஞ்சையுள்ள
சுப்புமாமா.

# ஓவியமும் காவியமும்.

'ஓவியம்' என்பது தமிழ்ச்சொல்; துகிலிகைக் கோலினாலும் வண்ணத்தினாலும் எழுதப்படும் உருவங்கள் எல்லாம் ஓவியம் எனப்படும். காவியம் என்பது வடமொழியில் 'காவ்ய' எனத் தாங்கும் பெயர்ச்சொல் தமிழில். காவியம் என்னும் சொல்வழக்குக் கடைச்சங்க காலத்திற்குப் பல ஆண்டுகளுக்குப் பின்னரே உண்டாயிற்றென்று சொல்லல் வேண்டும். ஏனெனின் சீவக சிந்தாமணிக்கு உரைகண்ட ஆசிரியர் நச்சினார்க்கினியர் ஓரிடத்தில் 'தொடர்நிலைச் செய்யுள் என்பது காவியம் அன்றென்றும் இரண்டன் இலக்கணமும் வேறுபடுமென்றும், தொடர்நிலைச் செய்யுளென்பது தமிழுக்குச் சிறப்பு எனவும் கூறியிருக்கின்றார். சிலப்பதிகாரம் சிந்தாமணி போல்வன தொடர்நிலைச் செய்யுள் நூல்களாகும். இவையிற்றை ஒப்ப வடமொழியில் வான்மீகமும் அதனை ஒப்பனவும் இருந்தன; பிற்றை ஞான்றைய வாசிரியன்மார் தொடர்நிலைச் செய்யுள் நூல்களையும் காவியம் என்று வழங்குவாராயினர் என்க. எங்ஙனமாயினும், காவியம் என்பது பொருள் அழகும் படிக்குநர்க்கினிமையும் மெய்ப்பாடும் பயப்பதாய்ச் செய்யுளாலாக்கப்படும் நூல் என்பது தெளிவாகின்றது.

இனி, நான்மாடக் கூடலில் நிலைஇய அங்கயற்கண் அம்மையாரின் உருவ எழிலை எடுத்து இனிது தெருட்டுவான் வந்த பேராசிரியரான குமரகுருபர அடிகள் 'தொடுக்குங் கடவுள்' என்ற முதலையுடைய செய்யுளில் ஓரிடத்தே 'திருவுள்ளத்தில் அழகு ஒழுக எழுதிப்பார்த்திருக்கும் உயிர் ஓவியமே" என்று நாகுளிர வயக்கெடுத்துக் கூறினர். இந்த இடத்திலே ஓவியத்தின் செவ்விய இயல்பு சொல்லப்பட்டிருக்கின்றது; ஓவியத்தின் திருந்திய வரைவு இலக்கணம் இவ்வாசிரியர் போல பிறர் எவராலும் தமிழிற் சொல்லப்பட்டிலது. அழகு ஒழுக எழுதப்படுவதுதான் ஓவியம் என்று பலர் கருதுகின்றார்கள். ஆனால், அஃது ஓவியத்தின் செவ்விய பெற்றிமையன்று, மற்றென்னையோவெனின், ஒரு பொருளின் பெற்றி குறித்த அது சிறிதும் மாறுமல் எழுதினும் அதன் இயல்பு உயிரிலதாய் வழிச்சிறவாது; உயிரை ஓர் ஓவியம் வல்ல புலவன் யாங்ஙனம் வரையமாட்டுவான், மாட்டானன்றே. உயிரில் எல்லாவுறுப்புக்களும் சிறந்து அழகு துறுமிப் பிறரைக் கவரச் செய்தவழித்தான் புலப்படுமெனச் எழுதப்பட்ட ஓவியத்துக்கு உயிர் உண்டோ இல்லையோ என்ற படிப்பார்தம் உள்ளத்தில் ஐயத்தைத் தோற்றுவிப்பதாகும். இக் கருத்துணர்ந்தே குமரகுருபர அடிகளும் தமது மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழில் "உயிர் ஓவியமே" என அம்மையாரின் திருவழகினை எடுத்து மணிவாய் மலர்ந்தருளினார் என்பது. "திருவுள்ளத்தில் அழகு ஒழுக எழுதிப் பார்த்திருக்கும் உயிர் ஓவியமே" என்பதில் பார்த்திருக்கும் என்ற தொடரைப் பார்த்து இருக்கும் என்று பிரித்துக்கொண்டு பார்த்தலே ஆண்டு அமையவும், 'இருக்கும்' என்பதை என் கருதிப் பெய்தாரெனின், அம்மையாரின் அருளொழுகும் திருவழகின் நோக்கத்திலே முற்றும் தங்கண்களைப் பதியவைத்த அவை தம்மைப் பிறண்டுச் செலுத்தாது சிறிதுகாலம அவ் வழகின் நுகர்தலிலே கருத்தூன்றினாராகலின் அச் சொற்பெய்தாரெனக. அதனால் அவ் வோவியம் கண்டாரான் விரும்பப்படும் தன்மை நோக்கமாகிய திருவாற்றுறமியதென்பதூஉம் அதுவே உண்மை ஓவியம் என்பதூஉம் பெறப்பட்டவாறு கண்டுணர்க. கம்பர் என்னும் புலவர் பெருமானும் தமது இராமாயணத்திலே அயோத்திநகரச் சிறப்பை எடுத்துரைப்பார், நகரப் படலத்திலே

'தாவில் பொற்றலத்தில்
நற்றவத்தினோர்கள் தங்குதாட்
பூவுயிர்த்த கற்பகப்
பொதும்பர்புக் கொதுங்குமால்
ஆவிஒத்த அன்புசேவல்
கூவவுந் தவணந்திடாத
ஓவியப் புறவின்மா
ருக்கலுழ் பேடையே,

என அயோத்தி நகரத்தின் ஓவியச் சிறப்பினை எடுத்துக் கூறியிருக்கின்றார். இந்தச் செய்யுளிலே புறவுப்பேடு ஒன்று தனதினிய சேவலைக் காணுதாக, வருந்தி அதனைத் தேடிப்போயிற்று போயது, நகரக் கோட்டை மதிலில் அழகிய பெண்புறவு உருவத்தையணைந்த சேவல் இருப்பக் கண்டு தன் குரலில் சேவலைக் கூவவும் அஃது அவ்வுருவமே தனது இனிய பெட்டையென்று அதனையே நோக்கி வாராதிருப்ப, அதுகண்டு தன் சேவலொடு ஊடல் உண்டாகிய பேடை புலன்களை அடக்கிய நிருவிரைபாளர் தங்கும் கற்பகச் சோலையில் போய் இருந்தது என்னும் பொருள் நன்கு சொல்லப்பட்டிருக்கின்றது இந்த மதிலில் ஓவியமாகச் செய்யப்பட்ட பெண்புறவை அஃது ஓவியமென்று அறியமாட்டாத புறச் சேவல் அதனை அணைந்து இருந்தது என்பது கம்பர் என்னும் புலவர் பெருமான் ஓவியத்தின் சிறப்பை விளக்க வந்த பகுதியாகும். ஈண்டும் ஓவியம் என்பது இதற்கு உயிருண்டு என்று கண்டவர் கருதும்படி எழுதப்படும் எழில் ஒழுகும் வடிவாம் என்பது இனிது புலனுகாநிற்கும். ஆகலால், ஓவியம் மக்களின் புறக்கண்ணை இன்புறுத்தும ஒருபொருள் என்று கடைப்பிடிக்க.

இனிக் காவியம் என்பது படிப்பார் மனத்திலே 'நகையே அழுகை இளிவரல் மருட்கை உவகையே அச்சம் பெருமிதம், என்ற மெய்ப்பாடுகளைத் தோற்றுவிக்கும் ஒரு பொருளாம். சிந்தாமணி சிலப்பதிகாரம இராமாயணம் கந்தபுராணம் பிரபுலிங்கலீலை முதலியன, படிப்பார்தம் உள்ளங்களில் அவரவர் நெஞ்சப் பான்மைக் கேற்ப மெய்ப்பாடுகளைப் பிறப்பிப்பனவாம். கம்பர் இராமாயணத்திலே கோசிக முனிவர் இராமனைத் தரும்படி தசரதனைக் கேட்டார்; கேட்டதும் தயரதன் பட்ட துன்பத்தை எடுத்துச் சொல்லுவார்,

"ஆருயிர்நின் றூசலாடக் கண்ணிலான்
பெற்றிழந்தான் என உழந்தான் கடுந்துயரம்'

என்றெடுத்து உரைத்தார். சிந்தாமணியிலும் இவை போல்வன பலவுண்டு. சிலப்பதிகாரத்தும் வழக்குரைகாதை போன்றனவும் பெருங்கதையில் 'யூகி' யிறந்தான் எனக் கேட்டு அழுத கதைப் பகுதியும் மெய்ப்பாடுகளை நனி தோற்றுவிப்பனவாம் என்றுணர்க.

ஆகலால், ஓவியம் வல்ல புலவனும் செய்யுள் வல்ல புலவனும் ஒருவரை யொருவர் ஒப்பர்; துகிலிகைக் கோலும் வண்ணமும் கிழியும் ஓவியம் எனப்படாவாறு போல எதுகையும் மோனையும் வண்ணமும் அடியும் தொடையும் செய்யுள் எனல் சாலது. ஓவியம் பார்ப்பவர் உள்ளத்து உணர்வை மிகுவிக்கும். செய்யுள் கருத்தூன்றிப் படிக்குநர் உள்ளத்து மெய்ப்பாட்டை மிகுவிக்கும்.

தேவார திருவாசகங்கள் முதலிய இறைவன் நூல்களும் மெய்ப்பாடுகளை இண்டாக்கலாம், அதைத் தமுங் காவியம் எனப்படுமோவெனின படாவென்றே யறிதல் வேண்டும், என்னையெனின், இவை இறைவன் பால் அன்பு முறுகிய தொண்டர்கள் அவன் அருள்வழி நின்று தமக்கு அவன் உணர்த்த உணர்ந்தவாறதைச் சொல்லிப் போந்தாரல்லது ஒன்றனை அழகுபெற எடுத்துப் புனைந்து உரைத்தாரல்லராகலின் அவை காவியம் எனப்படாவென்க. அற்றன்று அவையும் ஓரோவழி அழுகை முதலிய மெய்ப்பாடுகளைப் பிறப்பிக்கின்றனவன்றே யென்னில், பேதாய்! அழுகை காவியங்களில இரக்கத்தாலும் அச்சத்தாலும் வருதலல்லது அருளான் வந்தன அல்ல; தேவாரத் திருப்பாட்டுகளிலோ அவை அருள் நெறியில் நில்லார்க்கு ஒரு ஞான்றும் மெய்ப்பாட்டை உண்டாக்கா வாதலானும் அன்பு அருள் என்பன மெய்ப்பாடுகள் அல்லவாதலானும், இவ்விரண்டும் பிறவித்துயராய் கழிக்க வினையின் பகுதியாய்

தொடர்ச்சி 7ம் பக்கத்தில்,

# அமெரிக்காவின் அநியாயம்

## இற்றலிய அட்டூழியத்திற்கு உதவி எண்ணெய் நிர்ப்பந்தத்திற்குத் தடை.

### அமெரிக்க அறிஞரின் அபிப்பிராயம்.

அமெரிக்கப் பாராளுமன்றத்து அங்கத்தவரான போப் என்பவர் அமெரிக்கா, இற்றலிய-அபிஸீனிய யுத்த விஷயமாக நடந்துகொள்ளும் முறையைக் கண்டித்துப் பின்வருமாறு ஓர் சொற்பொழிவிற் குறிப்பிட்டார்.

"முசோலினி அநியாயமாக அபிஸீனியாமீது போர் தொடுத்திருக்கிறார். முசோலினியின் அக்கிரமத்தை அடக்க உலகில் சீர்திருந்திய சாதியார் யாவரும் முயற்சி செய்கின்றனர். ஆனால் இவர்களின் முயற்சி என் செய்யும்? எண்ணெய் நிர்ப்பந்தம் ஒன்றை விதித்து அதனைப் பலமாக அமுலுக்குக்கொண்டு வந்தாற்றான், இற்றலியின் யுத்தவெறி ஒழியும்.

"ஆனால் அமெரிக்காவில் உள்ள எண்ணெய் வர்த்தகர் தனக்குத் தேவையான எண்ணெய் முழுவதையும் தருவர் என்று முசோலினி பூரணமாக நம்பிக்கை கொள்ளுகிறார். இந்த அமெரிக்க வர்த்தகர் தமது பேராசையைச் சற்றுத் தவிர்ப்பாரானால், முசோலினியின் ஆக்கிரமம் எப்போதோ அடங்கிப்போகும். இதுவே உண்மை; இந்த உண்மையை அமெரிக்காவில் உள்ள சிறுபிள்ளைதானும் நன்கு உணரும்."

"அமெரிக்காவின் அநியாய, பச்சோந்தித்தன்மையான வெளிநாட்டு அரசியற்கொள்கையாலேயே சர்வதேச சங்கம் இற்றலியின் ஆக்கிரமத்தை அடக்கிச் சமாதானத்தை நிலைநாட்ட இயலாது இருக்கிறது.

### வரணிச் சைவமகா சபை

வரணிச் சைவமகாசபையின் முதலாம வருடாந்தக் கூட்டம் நிகழும் யுவ வரு தை மீ உ௭ உ (9-2-36) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணி தொடக்கம் வரணி இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெற்றது. அத்தருணம் அங்கத்தினருஞ் சமயாபிமானிகளுஞ் சமுகமளித்தனர்.

தெய்வ வணக்கத்தோடாரம்பமாய காரியக்கூட்டத்தில் மகாசபையின் அக்கிராசனர் திரு சி. கல்லமாப்பாணபிள்ளை அவர்கள் தலைமை வகித்தனர். மாலை 6 மணியளவிற் கூடிய பகிரங்க கூட்டத்தில் யாழ்ப்பாணம் ஆங்கில இந்துசாதனப் பத்திராதிபர் திரு. M. S இளையதம்பி (Advocate) அவர்கள் தலைமை வகித்தனர்.

அக்கிராசனர் தம் முன்னுரையிற் சைவ சபை சங்கங்களின் பயனைப் பற்றியும் சமயாபிமானிகளின் கடமைகளைப்பற்றியும் இனிய தோர் சொற்பொழிவை யாவருளத்தும் பசுமரத்தாணிபோல் நன்கு பதியுமாறு பொழிந்தனர். புலோலி ஆங்கில வித்தியாசாலை ஆசிரியர் திரு. இ. கனகசபாபதிப்பிள்ளை (பாலபண்டிதர்) அவர்கள் "சமயக் கல்வி" என்னும் விஷயத்தில் ஒருபந்நியாசமும், காத்திராப்பிரகாரம சமுகமளிக்க இயலாதிருந்த பிரம்ம ஸ்ரீ தி. செல்வத்திநாத தேசிகர் (பண்டிதர்) அவர்களுக்குப் பதிலாக "மாபாதகந் தீர்த்த சரித்திரத்தையிட்டு ஒரு உபந்நியாசமும நிகழ்த்தினர்.

பின்னர் வரணி அரசாங்க வைத்தியர் திரு. அ. கணபதிப்பிள்ளை அவர்களும் வரணி வடக்குச் சைவப்பிரகாச வித்தியாசாலையின் பிரதம ஆசிரியர் திரு. பொ. வேலுப்பிள்ளை அவர்களும் சபைத் தலைவர்க்கும் சொற்பொழிவாளர்க்குப் ஏனையோர்க்கும் நன்றுபசார வார்த்தைகள் கூறினர்.

அதன் பின்பு சாவகச்சேரி வித்துவான் திரு. ந. ச. பொன்னம்பலம் பிள்ளை அவர்கள் சபையை ஆசீர்வதித்தனர். இரவு $8\frac{1}{2}$ மணியளவில் தெய்வ வணக்கத்தோடு கூட்டம் முற்றுப் பெற்றது.

—கடித

## உலகம் பலவிதம்.

இந் நாட்களிலே பச்சை நிறமும் சிகப்பு நிறமும் படும்பாடு கொஞ்சமல்ல! இந்த இருநிறத் துணிகளும் காகிதங்களும் இலங்கையில் எங்கே பார்த்தாலும் விசேஷமாகக் காணப்படுகின்றன. பச்சை நிறக் கொடிகள் சில இடங்களிற் பகற்காலத்தில் சிலரால் ஏற்றப்படுகின்றன இராக்காலத்தில் வேறு சிலரால் இறக்கப்படுகின்றன; இப்படியே சிகப்பு நிறக் கொடிகளும் ஏற்றவும இறக்கவும் படுகின்றன; இந்தக் கொடியறுத்தல் யாழ்ப்பாணத்தில், சில காலத்திற் கமுவ திருடர்கள் செய்து வந்த தாலிக்கொடியறுத்தலை நாட்டிலும் அதிகமெனலாம்; ஆனால் இப்படியான செயல்கள் யாழ்ப்பாண மக்கள் ஆதியிற் கனவிலும் அறியாதனவா.

* * *

இனி ஒரு அபேட்சகரைப் புகழ்ந்தும் அவருக்கு எதிரியாகவுள்ளவரை இகழ்ந்தும் பச்சை சிவப்புக் காகிதங்களில் அச்சிட்டு வெளிவரும் துண்டுப் பத்திரிகைகட்கு ஒரு எல்லையில்லையெனலாம். செந்தமிழ்மங்கை இந்தத் துண்டுப் பத்திர ஆசிரியர்கள் கையிற்பட்டுப் படும்பாடு கொஞ்சமல்ல. தமிழ் மொழியிலேயுள்ள வசைச்சொற்கள் அசங்கத வார்த்தைகள் இடக்காடக்கர் குழூஉக்குறி அமங்கலப் பதங்கள் பிழைச் சொற்கள் கிராமியச் சொற்கள் பயனில்சொற்கள் இன்னும் தொல்லாசிரியர்களால் எடுத்து ஆளப்படாதன எவைகளோ அவைகளையெல்லாம் இப் பசிய செவ்விய துண்டுப் பத்திரங்களைப் படிப்பவர் தவறுமற் காணலாம்.

* * *

தமக்குச் சார்பான ஒரு அபேட்சகரின் அநுகூலத்தை விரும்பினல் இத்துண்டுப் பத்திரம் வரைவோர் அவருடைய கல்வியறிவொழுக்கப் பெருந்தன்மை, நாட்டிற்கு ஏதும் நன்மையை முன் செய்திருந்தால் அந்த நன்மை, நிறமை செல்வஞ் செல்வாக்கு முதலியவைகளை எடுத்துச் சொல்லி விட்டு, எழுதிவிட்டு அவ்வளவில் நின்று விடலாமே! ஆனால் இப்பொழுது நடக்கும் விஷயம் அப்படியல்லவே. குறித்த அபேட்சகருக்கு எதிரிடையாக நிற்பவரைத் தூற்றுவதும் அவமதிப்பதும் நிந்திப்பதும் வசைகூறுவதுமே எதிர்க் கட்சியார் செய்யும் தேர்தல் முயற்சியாகும். தூற்றுவதும் குறைகூறுவதும் அந்த அபேட்சகரைப் பற்றி மாத்திரம் நின்றுவிடவில்லை; அவருடைய தாய்வழி தந்தைவழி மனைவிவழி மூதாதையர் செயல குலம் கோத்திரம் மரபு இவைகளெல்லாம் சந்தியில் இழுக்கப்படுகின்றன அவர் மீதும் அவர்கள் மீதும் இவ்வகையெல்லாம்வ யப்படுகின்றன வாசிக்க அறியாத வம்பர் தலைபபட்டுக் காசுக்கு நூறு கவியென்றுங்கு வசைப்பாட்டுக்கள்பாடப்படுகின்றன இன்னும் இவை போன்ற அக்கிரமங்கள் கொஞ்சமா?

* * *

இவைகள் மாத்திரமா? இல்லை! இல்லை! இன்னும் பற்பல உண்டு; ஒரு அபேட்சகரைப் பற்றிச் சுவர்லேயும் மரத்திலேயும் ஒட்டப்பட்டிருக்கும் விளம்பரத்தை மற்றைக் கட்சியார் இரவிற் கிழித்து விடுதல், அந்த விளம்பரத்தின்மேல் எதிர்க் கட்சி அபேட்சகரின் விளம்பரத்தை ஒட்டுதல் விளம்பரங்களின் மீதும அந்த விளம்பரத்தில் அபேட்சகருடைய பிரதிமைப் படம் இருந்தால் அதன் மீதும் சாணத்தை எறிந்து அவமறைப் பங்கப் படுத்தி விடுதல் இப்படியான பல அநர்த்தங்கள் இங்கே நேருகின்றன.

* * *

கற்றூர் கல்லாதார் சிறியார் பெரியார் ஆண்கள் பெண்கள் அறிவுடையார்பாமரர்என்னும் பேதம் இன்றி எல்லாருஞ் சமமதஞ் சொல்லலாமென்ற இந்த முறையினால் வந்த கேடுகள் இவ்வளவினவென்றுசொல்ல முடியுமா? ஐயோ, புதிய முறையான தேர்தலே! நீ, மரியாதையோடு வாழ்ந்த யாழ்ப்பாண மக்களை அவர்கள் முன் செய்தறியாத கேள்விப்பட்டறியாத, தீய செயல்களையெல்லாம் செய்யும்படி இப்பொழுது தூண்டிவிட்டிருக்கிறாய்! குடியாதவர்களைக் குடிக்கவும், கைலஞ்சம் வாங்காதவர்களை வாங்கவும், நேர்மை யுடையவரை உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசவும் செய்து விட்டாய்; தகப்பனைப் பிள்ளை பகைக்கவும், தமயனைத் தம்பி வெறுக்கவும், புருஷனை மனையாள் கோபிக்கவும், நண்பனை நண்பன் தூறகூறவும், பெரியாரைச் சிறியார் நிந்திக்கவும, உபாத்தியாயரைமாணாக்கர் புறங் கூறவும் கல்லாரைப் பொல்லார் நகைக்கவும் இப்படி எத்தனையோ கேடுகளை யெல்லாம் விளைத்துவிட்டாய்!

* * *

இவை மாத்திரமா? இல்லை! இன்னும் பலவுண்டு; செல்வத்தோடு கூடியவர்களாய், தான தருமத்தைச் செய்து கொண்டு நல்ல வழியிற் காலங் கழித்தவர்களுக்கு இந்த அபேட்சையினை உண்டாக்கி அவர்கள் அதில் ஈட்டிய பணம முழுவதையும் இலஞ்சத்தின் பொருட்டுப் மோட்டர்பஸ் கார் என்னு மிவைகளின பொருட்டும இன்னும் பயனற்றவைகள் எவைகளோ அவைகளின பொருட்டும் செலவிடச் செய்து ஈற்றில் அவர்களை ஓட்டாண்டிகளாக்க நச்சரித்திருக்கின்றாய். புதிய தேர்தல் முறையாகிய நீ இந்த நகரில் இல்லாமற் போகுமாறு இருந்தால்ன்றி இங்குளார் ஈடேறுவதற்கு மார்க்கம இல்லையாகும். இங்குள்ளார் உன்னால் கெட்டுப்போனாலும், நீ இவர்களை விட்டுப் போவதில்லை!

# இற்றலிக்குச் சாட்டை.

## இந்தியச் சட்டசபையில் வீர கர்ச்சனை இற்றலி-இங்கிலாந்து தொடர்

### "ஹே! துஷ்டா! நிறுத்து உன்சேட்டையை."

சென்றவாரம் இந்தியச் சட்டசபைக் கூட்டத்தில் சர்வதேச சங்கம் இற்றலிக்கு விரோதமாக விதித்திருக்கும நிர்ப்பந்த முறைகளுக்கு ஆதரவு அளிக்கும்படி இந்தியச் சட்டசபையை அரசினர் கேட்டார்கள். அவ்விஷயமாக எழுந்த விவாதத்தின் போது, சர்வதேச சங்கத்தில் இந்தியா வகித்திருக்கும் நிலையை பற்றி ஸ்ரீ ஜநாத் எஸ் சத்தியமூர்த்தி தெளிவாகப் பின்வருமாறு எடுத்துரைத்தார்:—

"சர்வதேச சங்கத்தை ஸ்தாபித்த அங்கத்துவ தேசங்களில் இந்தியாவும் ஒன்று; ஆனால் இந்தியாவுக்குச் சுதந்திரமான வாக்குச் சம்மதம் கொடுக்கும் உரிமை அச்சங்கத்தில் இல்லை. இந்த நிர்ப்பந்த முறைகளைத் தயாரிப்பதில் தானும் இந்தியா பங்கெடுத்துக்கொள்ளவில்லை. பிரிட்டிஷார் சொல்வன செய்வனவற்றை ஆதரிப்பதே வாக்குச் சம்மதம் கொடுப்பதே இந்தியப் பிரதிநிதிகள் கடமையாயிருக்கிறது. இந்த நிலைமையில் உள்ள இந்தியாவிடப் வந்து நிர்ப்பந்தங்களுக்கு ஆதரவு கொடுக்கும்படி கேட்டல் கேலி செய்வதேயன்றி வேறு என்ன?

"சர்வதேச சங்க விதிகளை இங்கிலாந்தும் மற்றும் வெள்ளை வல்லரசுகளும் அடிக்கடி மீறிக் காமஞ் ஆற்றியிருக்கின்றன; ஈற்றில் வெள்ளை இற்றலியும் மீறியது: ஆனால் கறுப்பு அபிஸீனியவோ தன் மனச் சாட்சிப்படி சர்வதேச சங்க விதிகளைக் கடைசி வரையும் பாதுகாத்துவருகின்றது! சீ! சீ! வெட்கம்! கறுப்பர்களின் கௌரவத்தை, நேர்மையை வாய்மையைக் கண்டு வெள்ளையர் யாவரும் வெட்கித் தலைகுனிய வேண்டாமோ?

"ஆனால் நன்று; இற்றலியின் அட்டூழியத்தைப் பற்றிக்கேட்பது யார்? இங்கிலாந்து கேட்க முடியுமா? கேட்டால் இற்றலி என்ன மறுமொழி கூறும் தெரியுமா? 'நீ இந்தியாவையும் எகிப்தையும் வைத்துக்கொண்டு, அவற்றின் செல்வத்தைச் சுரண்டலாம், நான்றான் கறுப்பு நாடுகளைக் கைப்பற்றக் கூடாதோ?' என்று தடையின்றிக் கூறும்.

"சர்வதேசசங்கம் அன்று தொட்டின்றுவரை இது விஷயத்தில் கோழைத்தனமாக நடந்திருக்கின்றது. அதன் கோழைத்தனத்தைக் கண்ட இற்றலி மிஞ்சிவிட்டது. இந்தியராகிய நாம் அபிஸீனியருடன் அநுதாபம் கொள்ளுகிறேம். எமக்குச் சுதந்திரம் இருக்குமானல், இதோ நாம் அபிஸீனியா பக்கம் சேர்ந்து வெள்ளை வல்லரசை விரட்டி விரட்டி யடித்துக் கலைப்போம்

"இந்த மசோதாவை நாம் எதிர்க்கவில்லை; ஆனால் சர்வதேச சங்கப் பிரச்சினை விஷயமாக எமது அபிப்பிராயம் என்னவென்பதை இந்திய மந்திரிக்கு அறிவிக்குமாறு கேட்டுக் கொள்ளுகிறேம்.

"இந்தச் சட்டசபையில் உள்ள நாம் பாரதமக்கள் சார்பாக அபிஸீனியாவுக்கு உற்சாகமும் ஊக்கமும் அளிக்கத் தக்கதான ஓர் நற்செய்தியை விடுப்போமாக; "ஏ, துஷ்டா! நிறுத்து உன் சேட்டையை! உன் அக்கிரமத்தை" என்று இற்றலியக் கொள்ளைக்கூட்டத்தைநம் நோக்கிக் கூறுவோமாக"

### துவிச்சக்கர ஏமாற்றம்.

யாழ்ப்பாணம் பொலிஸ்கோட்டில் வண்ணார்பண்ணையில் வசிக்கும் சின்னப்பு செல்லையா தனக்கு J. 7987 இலக்கமிடப்பட்ட "நிருப்சயிக்கிளை" அவ்வூர்சின்னையா நடராசா 65 ரூபாவாக விற்றதாயும் தான் அதற்குக் காசு கொடுத்ததின்பின் சயிக்கிள் கொம்பனிக்காரர் மாத விதம் கட்டப்படவேண்டிய காசு கட்டாததற்குத் தன்னிடமிருந்து துவிச்சக்கரத்தை எடுத்துச் சென்று விட்டார்கள் என்றும் வழக்குத் தொடர்ந்தார். வழக்கு வருகிற 3–3–36 க்குத் தவணையிடப்பட்டது.

### கண்டக்டருக்கு 25 ரூபா.

சென்ற 18-2 36 செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் பொலிஸ்கோட்டில் சுப்பையா பெண் இளையபிள்ளை என்னும் காய்பிஞ்சு வியாபாரம் செய்யும் பெண்ணைச் சென்ற 28–10-35 —ல் வண்ணார்பண்ணைச் சிவன்கோவிலடிக்குச் சமீபமாய் எஸ். தம்பிராசா வென்னும் ஒரு பஸ் கொண்டக்டர் தனது பஸ்ஸில பிரயாணஞ் செய்யும்படி கேட்டு இளையபிள்ளையைக் கையில் பிடித்துக் கூப்பிட்டபோது அவள் மறுக்க "வராவிட்டால் போ" என்றுசொல்லித் தள்ளிவிட்டபோது அதே நேரத்தில் கார் ஒன்று வந்து தட்டினதாகக் குற்றஞ் சாட்டப்பட்ட வழக்கில் எதிரிக்கு 25 ரூபா அபராதம விதிக்கப்பட்டது.

# இந்தியா மீது அந்நியர் கண்!

## இங்கிலாந்தைக் களைந்தால் எவர் வருவார்? ஆட்சேபனைகளுக்கு ஆணித்தர மறுப்பு

### லண்டனில் ஜவகர்லால் சொற்பொழிவு.

"பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை விட்டுப்பிரிந்து போனல் ஜப்பான், ரஷியா போன்ற பெரிய நாடுகள் இந்தியா மீது படையெடுத்து வந்துவிடாதா"?

என்பது 'இந்தியா லீக்' காரியாலயத்தில் கூடியிருந்த இந்தியப் பத்திரிகை நிருபர்கள் பண்டித ஜவஹர்லாலிடம் போட்ட பல கேள்விகளின் ஒன்று.

இதற்கு பண்டித ஜவஹர்லால் பின்வருமாறு பதிலளித்தார்:—

"ஜப்பானியப் படையெடுப்பால் இந்தியாவுக்கு ஆபத்து வரப்போகிறதென்று நான் நம்பவே முடியாது. ஜப்பானிலிருந்து நமக்கு ஆபத்துக் கிடையாது.

"உண்மையில் எவ்வித வெளிநாட்டு ஆக்கிரமிப்பும் ஏற்படுமென்று பயப்படுவதற்கே இடமில்லை.

"பிரிட்டனை பலாத்காரமாக இந்தியாவை விட்டுத் துரத்தி நாம் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை விட்டுப் பிரிய வேண்டுமானல் அதற்குப்போதிய அளவு பலம் ஏற்பட்ட பிறகுதான் இந்தியா பிரிட்டினை விட்டுப் பிரியப் போகிறது. பலாத்காரமாக பிரிட்டினை இங்கிருந்து துரத்த நமக்கு சக்தி இருக்குமானல் புதிதாக யார் நம்மை எதிர்த்துப் படையெடுக்க முடியும்?

"அவ்வாறின்றி சிநேக முறையிலேயே நாம் பிரிட்டிஷ் சம்பந்தத்திலிருந்து விலகிக் கொள்வோமானல், பிறகு வெளிநாட்டு ஆக்கிரமிப்பு என்ற பிரச்னையே ஏற்படாது" என்று பண்டிதர் கூறினர்.

ரஷியா இந்தியா மீது படையெடுக்காதா? என்ற கேள்விக்கு பண்டிதர் கூறியதாவது:—

"ரஷியாவிலிருந்து ஆபத்தை எதிர்பார்க்க வேண்டியதில்லை. அது மட்டுமல்ல, ரஷியா ஒரு சுதந்தர இந்தியாவிடம் சிநேகமாகவே இருக்கு மென்று நம்பலாம். இந்தியா மீது படையெடுக்க வேண்டுமென்ற ஏகாதிபத்திய வெறியில் ஈடுபட ரஷியாவுக்கு சாவகாசம் கிடையாது. அது உள் நாட்டு அபிவிருத்தியிலேயே தன்முழுக்கவனத்தையும்செலவிடும்" என்று ஜவஹர் கூறினர்.

### புகைதப் பகுதியில் பெரும் நட்டம்.

இவ்வாண்டிலே இலங்கைப் புகைதப்பகுதியால் 45லட்சம் ரூபா நட்டம் ஏற்படும் எனக் கணிக்கப்பட்டிருக்கிறது.


## நாட்டுப் பொருள் அபிவிருத்தி.

[ வரையுளது ]

மூலதனம் ரூபா 30 000.

100 ரூபாகொண்ட 300 பங்குகள் உடையது.

பிரதான நோக்கமாகிய நெற்செய்கை சரைச்சி நீர்ப்பாச்சற்பகுதிகளில் நடத்துவருகிறது.

பங்கு ஒன்றுக்கு ரூபா 10 விகிதம் பத்துமாதங்களில் கொடுக்கலாம்.

பங்குத்தொகை மொத்தமாகக் கொடுப்பவருக்கு நூற்றுக்கு இந்து கழிவு

நீர்ப்பாச்சற் பகுதி வேளாண்மை நாளேற வருவாய் ஏறிவருவது தெளிவாயிற்று.

அதிக ஆதாயந் தருவது! பங்குக்கு முந்துங்கள்!!

யாழ்ப்பாணம் திருநெல்வேலி வ. சோமசுந்தரம்

" கந்தரோடை வித்தியாசாலை மனேச்சர் சி. கந்தையா

" நல்லூர் ஆசிரியர் வி. முத்துக்குமாரு M. A.

ஆகியோரிடம் பங்குகள் பெறலாம

ஆரம்ப கருத்தாக்கள்:—

Dr வ. சுப்பிரமணியம் Retired Prov. Surgeon.

R. R. நல்லையா J P. கா. ந. ச. தலைவர்.

வ. முத்துவேலு J. P. சொக்குவில கிராமச்சங்கத் தலைவர்.

K. தம்பிப்பிள்ளை வித்தியாசாலை மனேச்சர் காங்கேயன் துறை.

ஆ. மாணிக்கம் விஞ்ஞான சாஸ்திர ஆசிரியர், ஸ்கந்தவரோதயக் கல்லூரி கந்தரோடை.

(H 192, 6-11-35 to 5-5-36 (வி)

## விசேஷ விஞ்ஞாபனம்

நாளைத்தினம் மகா சிவராத்திரியின் பொருட்டுச் செவ்வாய்க்கிழமை 25-2-36 இந்தப்பகுதித் தேர்தற்றின மென்ற காரணம் பற்றியும் இந்துசாதனலயம் சைவப் பிரகாச யந்திரசாலை யென்னுமிவைகளில் எக் கருமமும் நடைபெறுவாதலினால் வருகிற திங்கட்கிழமை (24-2-36) இந்துசாதன ஆங்கில தமிழ்ப் பிரசுரங்கள் வெளிவரமாட்டா.

மானேஜர்



வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரனாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.

## இந்து சாதனம்.

யாழ்ப்பாணம்: யுவஹூ மாசிமீ அவ வியாழக்கிழமை.

### பெருந்தன்மையாக நடந்துகொள்ளல்வேண்டும்.

இந்த வாரத்திலேயே இலங்கையிலுள்ள பிரிவுசட்கு அரசாங்கசபைப் பிரதிநிதிகளைத் தேர்தல் செய்தலாகிய விசேஷ கருமம் ஆரம்பமாகின்றது. இத்தேர்தல் ஊநக்கூர் குறித்த குறித்த தினங்களில் இரண்டுவாரகாலம்வரையில் நடைபெறும். இத்தேர்தற்றினங்களில் ஏதும் சண்டை கலகம் வேறும் அனர்த்தங்கள் நேராவண்ணம் தடுத்தற்கான முயற்சிகளை அரசினர் தம்மால் இயன்ற அளவிற்குச் செய்துவருகின்றனர். இலட்சக்கணக்கான சனங்கள் சம்பந்தப்பட்டிருக்கும் இந்த விஷயத்திலே ஏதும் பெருந் தீமை விளையவொட்டாது தடுப்பதற்கு அரசினர்மாத்திரம் முயற்சிகள் செய்தால், அம்முயற்சிகள் போதியவாமோ என்பது சந்தேகம்: அபேட்சகர்களாயுள்ளவர்களும் தனித்தனி தத்தம் பரிவாரங்களால் எவ்வகையான சமாதான பங்கமும் வரவிடாது அவர்களைத் தடுத்துச் சாவதானமாக நடத்தல் ஆவசியகமாகும். தம் பரிவாரத்தவர்கள் செய்யும் பிழைகளால் நேரே கஷ்டமடைபவர் அபேட்சகரேயல்லாமற் பிறரல்லர். நல்லான் பொல்லானென்பதை அவன் கூட்டாளிமாரால் அறியலாம் என்ற கருத்தமைந்த ஒரு ஆங்கில பழமொழியுண்டு அஃதேபோல், ஒரு அபேட்சகர் தக்கவர் தகாதவர் எனபதை அவர் பொருட்டு ஈடுபட்டுழைக்கும் பரிவாரத்தினர்வாயிலாக அறிந்துகொள்ளுதல் முடியும்.

எவ்வகையான குறைவுகளோடு கூடியிருப்பினும் சனப் பிரதிநிதித்துவத்தை வகித்தலாகிய செயல் பெருப் பொறுப்பான செயல் என்பதை இவ்வபேட்சகர்கள் எவரேனும் ஒருபோதும் மறந்துவிட வொண்ணாது இந்த வருடம் சமீபத்தில் நடக்கவிருக்குந் தேர்தலில் அபேட்சகர்களாயுள்ளவர்கள பெருந்தன்மையாகவும் நீதிநெறியாகவும் நடந்துகொள்வரேல் அடுத்த அடுத்த முறைகளில் அவர்களும் எதிரிடையின்றிப் பிரதிநிதிகளாகத் தேர்தல் செய்யப்படல் முடியும். நியமனநாட் டொடக்கமாகத் தேர்தற்றினத்திற்கு முதற்றினம் வரையில் அபேட்சகரும் அவரவர் கூட்டத்தினரும் தத்தம் மனோரதம் நிறைவேறும் பொருட்டு யாதும் பிழையான வழியைக் கைக்கொண்டுவந்தாலும், தேர்தற்றினத்தன்று அவைகளையெல்லாம் மறந்து தீய செயல்களை அறவே விடுத்துப் பெருந்தன்மையாக நடந்துகொள்ளுதல் உத்தமமாகும்.

சிங்களநாட்டிற்காட்டிலும் இந்த யாழ்ப்பாண நாட்டிலேயே இத்தேர்தல்விஷயத்திற் பல வெறுக்கத்தக்க செயல்களும் பேச்சுக்களும் ஏற்பட்டிருக்கின்றனவென வதந்தி பிறந்துவிட்டது. இங்குள்ள தேர்தற்கட்சியார் இப்பொழுது நடந்துவருவதுபோலத் தேர்தற்றினத்திலும் நடப்பரேல் இவர்கள் தமிழ்மக்களுக்கு முன்னில்லாத திராவசையைத் தேடிவிட்டவர்களாவர். "கல்லாத பேர்களே நல்லவர்கள், நல்லவர்கள், கற்றுமறிவில்லாதஎன் கன்மத்தை யென்சொல்வேன்..." என்று தாயுமான சுவாமிகள் கூறியபிரகாரம், இங்கேயுள்ள பாமரசனங்களால் வரும் தீமை அதிகமில்லையாம். படித்தவர், காரியந்தெரிந்தவர், நியாயமறிந்தவர், பெரியமனுஷர், பொறுப்பான உத்தியோகம் வகித்தவர், இந்தத் தேர்தல் விஷயத்தில் எந்த நியாயத்தினாலும் எவ்வகையான பங்கும் பற்றக்கூடாதென்று அரசினாற் றடுக்கப்பட்டோர், சனத்தலைவர், இந்தச் சந்தர்ப்பத்திலே தம்மைப் பெரியவராக்கிக் கொள்ள முயல்வோர், நடுநிலைமையோடு கூடியவராய் ஒருசார்பும் பற்றுது பொதுமனுஷரா யிருக்கவேண்டியவர், இப்படியெல்லாம் தங்களைச் சொல்லி ஊரை ஏமாற்றி உள்ளொன்று புறம்பொன்றாக ஊடாடி வந்த ஆஷாடபூதிகள் ஆகியஇவர்கள் இந்தத் தேர்தற் காலத்திலே செய்யும் அக்கிரமங்களும் கிருத்திரமங்களும் கொஞ்சமல்ல; மூடன் தீமை செய்தாற் கண்டுபிடித்து அவனை அடக்குதல்முடியும்; படித்தவன் மூளையுள்ளவன் காரியமறிந்தவன் தீமை செய்யத் தொடங்கினால் அத்தீமையை இலகுவிற் கண்டுபிடித்து அடக்குதல் கஷ்டமாகும். மேலே சொல்லப்பட்ட பெயர் வழிகளே பாமர சனங்கட்கும் ஆசைவார்த்தை சொல்லிக் காசைக்காட்டி மதுவையூட்டி முறை திறம்பச் செய்தற்குக் காரணராயிருப்பவர்கள். இவர்கள் செயல் வேலி பயிரை மேய்ந்தவாறுயிருக்கின்றது இவர்கள் யாழ்ப்பாணத் தமிழ்மக்களின் கௌரவத்தைக் காக்கவேண்டுமேல் இத் தேர்தற்றினங்களிலாயினும் தம் பரிவாரத்தினரைச் செவ்வனே அடக்கி நடத்தித் தாமும் சாவதானமாக நடந்துகொள்ளல் உத்தமமாகும்: இந்த விஷயத்தில் பிள்ளையையுங் கிள்ளித் தொட்டிலையும் ஆட்டி வேடிக்கை பார்க்கும் அதிகாரிகளை நாம் குறை கூறி ஆவதென்ன?

### இன்னொரு பெரிய யுத்தம்?

இற்றைக்கு இரு ஆண்டுகளுக்கு முன், ஜப்பான் மஞ்சூரியாவைத் தனதாக்கி அதனைப் பெயரளவிலே சுயாட்சி நாடாக்கி ஆங்கு தன் செல்வாக்கை அதிகரித்துத் தன் பொருளாதார நிலைமையை அபிவிருத்தி செய்து வருகின்றது. இப்போது மங்கோலிய தேசத்தின் மீது தனது நாட்டத்தை ஜப்பான் செலுத்தி கொஞ்சங்கொஞ்சமாக அந்நாட்டைப் பங்கிடு பண்ணி விழுங்கி ஏப்பமிட்டு வருகின்றது. இன்னும் சில காலத்தில் முழு மங்கோலியாவும் சீனர் ஆட்சியில் இருந்து ஜப்பானியரிடம் சிக்குமென்று நாம் திடமாகக் காத்திருக்கலாகும்.

இது விஷயத்தில் சீன அரசினரால் ஒன்றும் செய்ய முடியாது என்பதே எமது அபிப்பிராயமாய் இருக்கிறது. அவர்கள் ஏதும் நடவடிக்கை யெடுத்தாலும் அதனால் எவ்வித பயனும் தற்போதைய நிலையிற் கிடைக்கமாட்டாது.

ஆனால் மங்கோலியாவில் ருஷியாவின் செல்வாக்கு அதிகம் உண்டு. மங்கோலியா ஜப்பான் வசமானால் ருஷியாவின் உரிமைகள் அநேகம் பாதிக்கப்படும். எனவே ஜப்பானை மங்கோலிய விஷயத்தில் ருஷியா எதிர்ப்பார்கள் என்றும், ருஷியா போரில் இறங்கினால் அது கடுமையாக இருக்குமென்றும் நாம் காத்திருக்கலாகும்.

இப்போதுதானும் ருஷியா ஜப்பான் என்னும் இரு நாடுகட்கிடையிலும் அற்ப பிணக்குகளினால் எழும் பல கலகங்கள் தோன்றியிருக்கின்றன. சிறக்கு முற்றிப் பவுத்திரமானவாறு, இக் கலகங்கள் பெரிய யுத்தமாய் முடியா என்பதற்கு என்ன உத்தரவாதம்?

ஜப்பானின் பகைமையை முன்னிட்டே ருஷியா சர்வதேசசங்கத்திற் சேர்த்திருக்கிற தென்றும் சொல்லப்படுவதில் உண்மையில்லாமல் இல்லை.

## கண்ணோட்டம்.

### இவர்களின் கொள்கை என்ன?

சேர் D. B. ஜெயத்திலகா, மிஸ்டர் D. S. சேனநாயக்கா, மிஸ்டர் G. C. S. கொரியா, மிஸ்டர். S. W. R. D. பண்டாரநாயக்கா எனபவர்கள இலங்கை (?) காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள்; ஆனால் இவர்கள் இத்தேர்தற்காலத்து அபேட்சகர் சிலர்க்கு ஆதரவுகொடுப்பதை நோக்குமளவில் இவர்களின் அரசியற் கொள்கையில், மனவுறுதியில் நாம் அவநம்பிக்கை கொள்ளவேண்டியிருக்கிறது. பலசந்தர்ப்பங்களில் இவர்கள் காங்கிரஸ கட்சியின் அபேட்சகர்க்கு மாறாக வேலைசெய்கின்றனர். இவர்கள் தாமா பொறுப்புவாய்ந்த பதவிகளை ஏற்று நடத்தக்கூடியவர்கள்? இவர்கள் தாமா—இப் பஞ்சோத்திக் குழுவினர் தாமா—எம் இலங்கை நாட்டின் தலைவராகவுள்ளவர்கள்?

### காங்கேசன் துறைப்பகுதி தெரிவு

இத்தெரிவு விஷயமாக எமது 9-12-35 பத்திரிகையில் "சஞ்சயன்" என்னும் புனைப்பெயர்கொண்ட ஒருவர் ஹாஸ்யமாக, "காங்கேசன் துறை அபேட்சகர் ஒரு தனிப் பெரும் பொருளாய் தம்முடனே போட்டியிடத் துணிபவரை, காதக் கறந்து........." என்று தமது "பலசாக்கின்" கீழ் எழுதியமையை வைத்துக்கொண்டு காங்கேசன்துறைப் பகுதித் தெரிவில் சிலர் பொய்ப்பிரசாரம் புரிந்துவருகின்றனர் எனபதறிந்து மனம் கவல்கின்றோம். "வாஸவன்", "சஞ்சயன", "ஸ்ரீதரன்" முதலாம் நிருப நேயர்கள் ஹாஸ்யமாக நகைச்சுவை ததும்ப எழுதும் கட்டுரைகளுக்கு யாம் பொறுப்பாளியல்லேம் என்பதனையும், அந்நகைச் சுவையினை விளங்க முடியாது, விபரீத அர்த்தம்கொண்டு இடர்ப்படுவார் நிலைநோக்கி இரங்குகின்றேம் என்பதனையும் இன்னொருமுறை வற்புறுத்திக் கூற விரும்புகின்றேம். இன்னும் ஷெ வாக்கியம் கொண்ட கட்டுரை ஸ்ரீ நடேசபிள்ளை அவர்களால் அல்லது அவர்க்காதரவு தேடும் ஒருவரால் எழுதப்பட்டது என்று கூறப்படுவதைப் போல அபத்தம் பிறிதொன்றில்லை என்பதனையும் காங்கேசன்துறை நகர ஜனங்களுக்கு எடுத்துரைத்து உத்தரவாதம் கூற விரும்புகின்றேம்.

### சாவகச்சேரிச்சந்தை.

கழுமவர்க்கு அதிகாரம் வந்தவுடன் அதனைக் குரங்கின் கைக் கொள்ளி கொடுத்தன்ன என்ற பிரகாரம் உபயோகித்து வருகின்றார்கள் எனச் சிலர் கூறுவர். அவர் கூற்றுச் சில சந்தர்ப்பங்களில் உண்மைபோலவே தோற்றுகிறது. இதற்கு உதாரணத்தில் உள்ள சந்தை குத்தகைகாரர் இக்கூற்றுக்கு இலக்காகித் தபோராசையினால் சுயநல வேட்கையினால், தமக்கு மாத்திரமல்ல, தம்மவர் யாவர்க்கும் கோடரிக்காம்புகள்போல விளங்குதல் உண்மையில் வருந்தத்தக்கதே! யாழ்ப்பாண, கனநகர சந்தைகளின் சீர்கேடு ஒருவாறு தீருமுன்னரும் சமையத்தில் சாவகச்சேரிச் சந்தைவிஷயமாக ஓர் ஏழை வியாபாரி கூக்குரல் செய்துவிடுத்திருக்கும் கடிதம் ஒன்று இப்பத்திரிகையின் பிறிதோரிடத்தில் வெளிவருகின்றது. அதனை நம் மாகாணத் தலைவர்க்குச் சமர்ப்பிக்க விரும்புகின்றோம். இக் கூக்குரல் உண்மையா? பொய்யா? என்பதனை நம் தலைவர் அவர்கள் நேரே சென்று பார்த்தல் வேண்டும். ஏழைகள் குறையைப் போக்குதல் வேண்டும். நம மாகாணத்தலைவர் ஏழை பங்காளன் என்னும் பெயரை எடுத்திருக்கிறார். எனவே, அவர்க்கு இது விஷயமாக நாம் அதிகம் சொல்லவேண்டியது இல்லை. இது விஷயத்தில் அன்னவர், மற்றவர்களை நம்பியிராது தாமே சென்று நிலைமையை உள்ள உள்ளவாறே அவதானித்து, ஏழைகள் குறையைத் தீர்ப்பார் என்றே நாம் நம்புகிறேம்.

### சங்கீத கதாப்பிரசங்கம்

சென்ற இரவு உடுவில் கிழக்கு கற்பக விநாயகர் ஆலயத்தில காரைக்காலம்மையார் சரித்திரம் பக்கவாத்தியசகிதமாக ஸ்ரீ. க. வடிவேலு அவர்களால் செய்யப்பட்டது: பிரசங்கமுடிவில் ஹிந்து வாலிபர் சங்கம் ஒன்றும் நிறுவப்பெற்றது.

### ஆட்டுக் கள்வன்

யாழ்ப்பாணம் சோனகதெருவில் வசிக்கும் சுல்த்தான் காதர் என்னும் கசாப்புக்கடைக்காரனும் இன்னொருவனும், அவ்வூர் மீராசாகிப் பிச்சைக்கனி என்பவருடைய ஆட்டைக் களவாண்டு அதனைக் கொன்று அதன் தோலைத் தம் வளவுக்குட் புதைத்தனர் என்று யாழ்ப்பாணம் பொலிஸ் நீதிஸ்தலத்திற் குற்றம் சாட்டப்பட்டனர். நீதிபதி வழக்கை வருகிற 3-3-36 இற்குத்தவணையிட்டார்.

### கத்தோலிக்கக் கோவிலில் திருட்டு

நேற்றிரவு வண்ணார்பண்ணை ஓட்டுமடத்தில் உள்ள செபஸ்தியார் கோவில் என்னும் கத்தோலிக்க தேவாலயத்தில் ஓர் துணிகரமான களவு முயற்சி செய்யப்பட்டது என்று அறிகிறேம். நேற்றுப்பகல் ஒருவன், அக்கோவிலின் பராமரிப்புக்காரரின் வீட்டிற்குச் சென்று ஓர் புத்தகம் வாங்கிச் சென்றானாம். பின்னர் அதே அவன் கோவிலுக்குள் ஒளித்திருந்து, இரவு 11 மணிவரையில் அங்கேயிருந்த உண்டியற் பெட்டியின் ஆமைப் பூட்டை உடைத்தானாம். உடைத்த சத்தத்தைக் கேட்ட கோவிற் பராமரிப்புக்காரர் அயலேயுள்ளவர்களின் உதவியைக்கொண்டு அவனைக் கையும் மெய்யுமாகப் பிடிக்க, அவன் தான் பூட்டுடைத்துக்களவாடவில்லை யென்றும், அப்படிச் செய்தவன் ஓடிவிட்டான் என்றும் கூறினான். இவனை உடனே கட்டிவைத்துப் பின் அதிகாரிகளிடம் ஒப்புவித்தனர். இவன் ஊர்காவற்றுறையில் இருப்பவனாம்.

### மலாயாவிலிருந்து ஏராளமானபேர் திரும்பினர்

பிரிட்டிஷ் இந்திய ஸ்டீம் நவிகேஷன் கம்பெனியின் மெயில் கப்பல் ரஜுலாவானது சென்றவாரம் மலேயாவிலிருந்து நாகப்பட்டணத்திற்கு வந்து சேர்ந்தது. இந்தக் கப்பலானது தபால் பைகளையும் சரக்குகளையுந் தவிர நாகப்பட்டணத்திற்கு சுமார் 1200 பிரயாணிகளையும் சென்னைக்குச் சுமார் 1100 பிரயாணிகளையும் மலேயாவிலிருந்து கொண்டுவந்தது. நாகப்பட்டணத்தில் இறங்கிய பிரயாணிகளில் அதிகமாக 250 பேர்கள் வேலைக்கு லாயக்கற்றவர்களென தீர்மானிக்கப்பட்டு மலேயா அரசினரால் அவர்கள் தாயகமாகிய தென்னிந்தியாவிற்குத் திருப்பி அனுப்பப்பட்டவர்கள். சென்னையில இறங்கவேண்டிய பிரயாணிகளும் சற்றேறக்குறைய 400 பேர்கள் இப்படிப்பட்டவர்களேயாகும். இப்பொழுது மலேயாவிலிருந்து தென்னிந்தியா திரும்புபவர்களின் தொகை அதிகரித்துவருகிறது.

### பிரியாவிடைக் கூட்டம்.

சென்ற இருபது வருஷகாலமாக ஐக்கிய நாணயசங்கத்தில் அபிமானங்கொண்டு தொண்டாற்றியவரும் தொல்புரம் மூளாய் ஐக்கிய மேற்பார்வைக் காரராயிருந்து இளைப்பாறியிருப்பவருமாகிய, திருவாளர் மு. செல்லப்பா அவர்களின் பிரிவைக் குறித்து, ஷெ கூட்டமொன்று, சங்கானை மேற்குத் தென்பகுதி ஐக்கிய நாணயசங்க ஆதரவில், 16-2-36 ஞாயிற்றுக்கிழமை மாலை ஐந்து மணியளவில், சங்கானைமேற்குக் கும்மந்தவத்தை வயிரவ கோயிலடியில் புதிதாய் அமைக்கப்பட்ட பந்தரில், மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

## பொய்த்தகவல் அளித்தாராம்

### சுப்பிறீம் கோட்டில் விசாரணை.

### எதிரி விடுதலை.

(நமது நிருபர்)

பல்லாகத்தைச் சேர்ந்த P. இராமலிங்கம் என்பவர் தபாற்கந்தோர் உத்தியோகப் பரீட்சைக்குத் தமது பிறப்புத் திகதியை மாற்றி அனுப்பி தபாற் குதித் தலைவரை ஏமாற்ற முயற்சித்தார் என்று யாழ்ப்பாணம் சுபிறீம் கோட்டில சென்ற 19-2-36 இற் குற்றஞ் சாட்டப்பட்டார்.

முடிக்குரிய நியாயவாதி மிஸ்டர் A. H. R. வீரசூரியா வழக்கைநடாத்தினார்.

எதிரிக்காக நியாயவாதி ஸ்ரீ S. நடேசனும நியாயதரந்தரர் ஸ்ரீ H. R அரியகுட்டியும் ஏற்பட்டனர்.

வழக்குக்கேற்ற அநேக அத்தாட்சிப் பத்திரங்கள் இருந்தபோதிலும் வழக்காளி கட்சியார், P. இராமலிங்கம்தான் இவற்றையெல்லாம் செய்தவர் என்று ருசுப்படுத்தாதபடியால், ஜூரிமாரின் ஏகமனதான அபிப்பிராயப்படி நீதிபதி அவரை விடுதலையாக்கினர்.

### யாழ்ப்பாணம் சுப்பிறீங்கோடு.

புல்லைத்தீவைச் சேர்ந்த வேலன்குளத்தில் வசித்த கதிராசி என்னும் பெண்ணை நடுக்காட்டிற் கொலை செய்தனர் என்று குற்றஞ்சாட்டப்பட்ட வழக்கில் 1ம் எதிரியாகிய சங்கரி சின்னத்தம்பிக்கு 6 வருஷக் கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. 2ம் 3ம் எதிரிகள விடுதலை செய்யப்பட்டனர்.

விசாரணையில் விளக்கமறியலில் வைக்கப்பட்ட சின்னக்குட்டி சின்னத்துரை என்பவன் பொய்ச்சாட்சியம் கொடுத்தான் என அவனுக்கு 3 மாதக் கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

### யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம்.

பரீட்சைகள் தவணை.

இம்மாதம் 25-ந் திகதி மேற்படி சங்கப் பரீட்சைகள நடத்துவதற்குக் குறிக்கப்பட்ட இடங்கள் சிலவற்றில் அரசாங்கசபைத் தெரிவு நடாத்தப்படவிருப்பதாலும், அக்காலத்தில் வித்தியாதரிசிமார்க்கு ஓய்வு இல்லாதிருப்பதாலும் சங்கப் பரீட்சைகள் பின்போடப்படலாயின.

அடுத்த மார்ச் மாதம் 18ம் 19ம் 20-ம் தேதிகளில் ஷெ பரீட்சைகள் நடாத்தப்படும் என்று சங்கக் காரியதரிசி தெரிவிக்கின்றார்.


### விளம்பரம்.

"ஆனைக்கோட்டை சுதேச விஷவைத்தியசாலையை நடாத்தும் செ. துரைராசன் கடினசுகயீனமாயிருப்பதனால் ஷெ வைத்தியசாலையிற் பாம்பு கடிக்கு இன்னும் மூன்றுவாரம்வரை வைத்தியம் நடைபெறா!

ஏனைய நோயாளர்களை வழமைபோல் குறித்த நேரத்தில் அவரின் சேவகரால் பார்வையிடக்கூடும்.

இங்ஙனம்,
கி. சுப்புறவு வைத்தியர்,
சுதேச விஷ வைத்தியசாலை.
(Mis 279. 20-2-36)


### காணிகள் விருத்தி செய்தற்கு கொடுக்கும் அறிவித்தல்.

கெடுந்தீவிலுள்ள காணிகளுக்கு வடமாகாணத்துக் கவெண்மெண்ற் ஏச்சண்டர் 1936-ம் ஆண்டுபங்குனிமாதம் 10 ம் தேதிவரைக்கும் கவேகுப்பு இலங்கையரிட மிருந்து (Middle Class Ceylonese) காணித் துண்டுகள் கேட்பதற்கு அனுப்பப்படும் விண்ணப்பப் பத்திரங்களை ஏற்றுக் கொள்ளுவார். இதைப்பற்றிய விவரங்கள் மாசி (வெப்புறவரி) மாதம் 21 ம் தேதிக்கெசற்றில் பார்த்து அறிந்து கொள்ளலாம். அல்லது வடமாகாணத்துகவெண்மெண்ற்ஏச்சண்டருக்கு எழுதி அறிந்து கொள்ளலாம்.

சி. எல். விக்கிரமசிங்க.
காணிக் கொம்மிஷனர்
கொழும்பு 18-2-36 (G 64 20-2-36)

# இற்றலிக்கு மகத்தான வெற்றி.

## அபிசீனியர் கூறும் மறுப்பு. மழையினால் இற்றலிக்குச் சேதம்.

## மாகேலில் இற்றலியர் திண்டாட்டம் உணவுக்கு வழியில்லாமல் கஷ்டம்.

### இற்றலிக்குப் பெரும் வெற்றி.

சென்ற 6ம் தேதி தொடக்கம் 15ம் தேதி வரைக்கும் மாகேலுக்குத் தென்பகுதியில் மிகவும் கோரமான யுத்தம் நடைபெற்றது. அபிசீனிய யுத்த மந்திரியான ரூஸ் முலகேதாவின் சிறந்த சைநியம் இந்த யுத்தத்திற் பங்குபற்றியது. 72000 வெள்ளைப்படைகள் இற்றலியர் பக்கம் யுத்தம் செய்தன. 75000 அபிசீனியர் இதில் பங்குபற்றினர். ஈற்றில் இற்றலியர் மகத்தான வெற்றியடைந்தனர். 5000 அபிசீனியரும் 500 இற்றலியரும் மாண்டனர் என்று உரோம் நகரில் இருந்து வந்த செய்தி ஒன்று கூறுகிறது. இந்த யுத்தம் தொடங்கிய நாள் முதல் இற்றைவரை, இப்படியான பெரிய யுத்தம் நிகழவில்லையாம். இந்த மகத்தான வெற்றியையிட்டு இற்றலியெங்கும் கொண்டாட்டங்கள் நிகழ்கின்றன.

### மறுக்கப்படுகின்றது.

மேலே காட்டப்பட்டுள்ள செய்திக்கு ஆதாரம் இல்லையென்றும், இற்றலியர் கூறுகிறபடி அத்தகைய மகத்தான வெற்றி கிடைக்கவில்லையென்றும் அபிசீனிய அதிகாரிகள் கூறுகின்றனர்.

### கன்னியாஸ்திரி மடத்தின் மீது குண்டுவீச்சு.

அபிசீனியாவிலே ஹெமிக்காவிக்கு அணித்தாகவுள்ள ஓர் கன்னியாஸ்திரி மடத்தின்மீது இற்றலிய விமானங்கள் குண்டுமாரி பொழிந்தன: மடத்தில் இருந்த கன்னியாஸ்திரிமார் தெய்வாதீனமாக உயிர் தப்பிக்கொண்டனர்.

### அபிசீனியர் வெற்றி.

அடோவாவில் இருந்து மாகேலுக்குச் செல்லும் தெருவை முற்றாகப் பங்கப்படுத்திவிட்டதாக அபிசீனியர் தெரிவிக்கின்றனர். மாகேலில் உள்ள இற்றலியப்படைகளுக்கு உணவு அளிப்பதுதானும் முடியாமல் இருக்கிறது. ஆகாயவிமானங்கள் மூலமாக உணவுப்பொருள் அனுப்பவேண்டியிருக்கிறது.

### அபிசீனியாவிற் பெரும் மழை.

அபிசீனியாவெங்கணும் சென்ற வாரத்திறுதியிற் பெரும் மழை பொழிந்தது. இதன் பயனாகத் தெஸிக்குச் செல்லும் தெருவானது மிகவும் பழுதுற்று இருக்கிறது. இந்தத் தெருவால் மோட்டர்லொறிகளோ, தாங்கிகளோ செல்லமுடியாது என்றும், இதனால் இற்றலியர்க்கு அதிக சேதம் ஏற்பட்டிருக்கிறதென்றும் சொல்லப்படுகிறது.

### தென்பகுதியில்.

தெற்குப்பகுதிப் போர்முனையில் அபிசீனியச் சேனாதிபதி ரூஸ் நசிபுவின் படைகட்கிடையிலும், இற்றலியச் சேனாதிபதி கிறேஸியானியின் படைகட்கிடையிலும் மும்முரமான போர் நடக்கின்றது என்றும் தெரிகிறது.

### இற்றலிய விமானம் எரிந்தது

சென்ற 15-ம் தேதி சில ஆகாசவிமானங்கள் டெஸிநகர்மீது நின்று குண்டுமாரி பொழிந்தன. சிறிது நேரம் செல்ல, அவற்றில் ஒன்றில் நெருப்புப்பற்றிக் கீழ் வீழ்ந்தது. உள்ளே யிருந்தவர்கள் கடுங்காயமுற்றுச் சிறைப்பட்டனர்.

### இன்னும் 25000000 பவுண்.

அபிசீனியயுத்தத்தைத்தொடர்ந்து நடாத்துவதற்காக, இன்னும் 25000,000 தங்கப் பவுண் செலவிட இற்றலிய அரசினர் தீர்மானித்திருக்கின்றனர் என்று அறிகிறோம்.

### 4000 பேரின் துரோகம்

இற்றலியப்படைக்குத் துரோகம் செய்து அபிசீனியர் பக்கம் சரண் அடைந்து 4000 எரிட்ரிய வீரர் கெனியா எல்லைப்புறத்தில் வைக்கப்பட்டிருக்கின்றனர் என்றும், யுத்தம் தொடங்கியபின் எல்லாமாக 10000 எரிட்ரியர்கள் இற்றலி பக்கத்திற்குத் துரோகம் செய்தனர் என்றும் தெரிகிறது

### இத்தாலியின் பிரசாரம்.

அபிசீனியயுத்தத்தைப்பற்றி ஆகாயவசனி மூலம் ஹிந்துஸ்தானியில் இத்தாலி பிரசாரம் செய்து வருகிறது ரோமாபுரியிலிருந்து வரும் ஆகாயவசனிப் பேச்சு நாடுகளிலெல்லாம் சுலபமாய்க் கேட்கிறது.

இரண்டு தினங்களுக்கு முன்பு, செஞ்சிலுவைச் சங்கக் கோட்டியினர் மீது வெடிகுண்டு எறிந்ததாக வந்த வதந்தியை ஆகாயவசனி மூலம் முற்றிலும் மறுத்தது. மன்னிப்பில் அபிசீனியர்கள் செஞ்சிலுவை அடையாளங்களை அணிந்து கொண்டு ஆயுதங்களையும் வெடிமருந்து வகைகளையும் திருட்டுத்தனமாக அதன் அதில் பாதுகாத்து வருவதாகவும் இத்தாலி கூறியுள்ளது. இப் பேச்சு முடிவில் அடிக்கடி இந்துஸ்தானியில் ரோமாபுரியினின்றும் ஆகாயவசனி மூலம் சமாசாரங்கள் அறிவிக்கப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டது.

### கொப்பரு விலை

கொழும்பிலே கொப்பரு கண்டி ஒன்று 48½ ரூபாயாக விற்கப்பட்டது.

---

### அகில இலங்கை மோட்டர் சாரதிகள் வேலை நிறுத்தல்.

பிரமாணத்தை மாற்றுதல் முடியாது.

பத்து முறைக்கு மேற்பட நீதிஸ்தலத்தில் அபராதம் இல்லையேல் மறியல் விதிக்கப்பெற்ற மோட்டர் சாரதியின் சாரத்திய தஸ்தாவேஜ் பத்திரம் தவிர்க்கப்படுமென்றும் அவன் பின் எக்காலத்தும் சாரத்தியஞ் செய்தல் முடியாதென்றும் கருதக்கொண்ட ஒரு புதிய பிரமாணத்தை அரசினர் விதித்துச் சிலகாலமாக வற்புறுத்தினர். இதனால் பன்னூற்றுக் கணக்கான சாரதிகள் தொழிலற்றுப்போய்த் தங்களையும் தங்கள் குடும்பத்தினரையும் காப்பாற்றுதல் முடியாதாகத் தயங்கலாயினர். பஸ் சாரதிகள் லொறிச் சாரதிகள் இதனை உத்தேசித்து ஊர்கள் தோறும் கூட்டங் கூட்டி இக்கப் பிரமாணம் தவிர்க்கப்படாத பட்சத்தில் தாமெல்லோரும் ஒருங்கு வேலை நிறுத்தலைச் செய்வதாக நிச்சயித்தனர். ஆனால் அரசாங்கசபை மந்திரிமாரும் இன்னும் சிலரும் இதற்கு ஏதும் ஒழுங்குவிரைவிற் செய்வதாக வாக்களித்தனர். மந்திரிமாரைக் கொண்ட ஒரு கூட்டம் நேற்றைத்தினம் கூடியது; அதில் இப்போதைக்கு அந்தப் பிரமாணத்தை மாற்றிக் கொள்ளுதல் முடியாதென நிச்சயித்து வெளியிடப்பட்டது.

---

### பொலிசிற்கு விளக்குமாற்றடி.

அவிசாவளையைச் சேர்ந்த சீ. டி. பிரிஸ் என்பவன் ஓர் சுத்தியலால் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரை அடித்தார் என்றும் அவனுடைய மனைவி அவ் வுத்தியோகத்தர்க்கு விளக்குமாற்றால் அடித்தாளென்றும் இருவரும் அவிசாவளைப் பொலிஸ் தானத்தில் குற்றஞ் சாட்டப்பட்டனர். நீதிபதி எதிரிகளைக் குற்றவாளிகளெனக் கண்டு முதலாம் எதிரிக்கு 15 ரூபா அபராதம் அல்லது இருவாரச் சிறைத்தண்டனையும், 2ம் எதிரிக்கு 5 ரூபா அபராதம் அல்லது 5 நாட் சிறைத்தண்டனையும் விதித்தார்.

# இந்திய அரசியற் குறிப்புக்கள்.

### மிகவும் பிரதான விஷயம்

ஐரோப்பாவிற் 14 நாள் தங்கியிருந்த பின் ஸ்ரீஜுத் சுபாஷ் சந்திரபோஸ் அவர்கள் சென்றவாரம் பாரிஸ் நகருக்கு வந்தார். அவர் ஜெனிவாவில் சில நாட்கள் இருந்து மார்ச் மாத மத்தியில் இந்தியாவிற்கு மீளுவார். பாரிஸில் இந்தியர் பிரச்சினை சம்பந்தமாக ஓர் பத்திரிகை நிருபர் கேட்டதற்கு ஸ்ரீஜுத் போஸ் பின்வருமாறு கூறினார்:

"லக்ஷ்மணபுரிக் காங்கிரஸிற்கு நான் செல்வேன். அங்கே மிகவும் முக்கியமான ஓர் விஷயம் விவாதித்துத் தீர்மானிக்கப்படும். அதாவது புதிய அரசியலின்படி மாகாணச் சட்டசபைத் தேர்தல்களில் காங்கிரஸ் வெற்றிபெற்றால் காங்கிரஸ் வாதிகள் மந்திரிப்பதவிகள் ஏற்கலாமா? என்பதே. இது விஷயத்தில் எல்லாம் மகாத்மாவின் சித்தத்திலேயே தங்கியிருக்கிறது. மகாத்மா என்ன நிச்சயத்திருக்கிறாரோ அது காங்கிரஸ் மகாசபையில் நிறைவேறிவிடும்."

---

### தேசத்தொண்டர் மறைவு.

அஸாம் பகுதிக்கு இந்தியச்சட்டசபையில் காங்கிரஸ் பிரதிநிதியாயிருந்தவரும், பன்முறை சிறைபுகுந்தவரும், பெரும் கல்விமானுமாய ஸ்ரீஜுத் நவின்சந்திரபர்தலோய் என்னும் தேசாபிமானி, தமக்கு ஏற்பட்ட ரண நோவினால் சென்ற 16-ம் தேதி தேகவியோகமாயினார்.

---

### காக்கோரி உண்ணாவிரதம்.

லக்ஷ்மணபுரி மத்திய சிறைக்கூடத்தில் உண்ணாவிரதம் இருக்கும் ஸ்ரீஜுத் ஜோகேஷ் சட்டர்ஜி என்னும் காககோரிச் சிறையாளர் விஷயத்தைப்பற்றி ஆலோசிக்கவேண்டும் என டக்டர் N. B. காரே இந்தியச் சட்டசபையில் ஒரு அறிக்கை கொடுத்திருக்கிறார்.

---

### பழைய தலைவர் மரணம்.

காங்கிரஸ் மகாசபையின் பழைய தலைவர்களில் ஒருவரும், பாரிய செல்வந்தரும், அறஞருமான சோடின்ஷா டவாச்சா அவர்கள் 17ம் தேதி பம்பாயில் உள்ள தமது இல்லத்திற் தேகவியோகமானார். இவர் இறக்கும்போது வயது 92

---

### யாருடையது?

மசூலிப்பட்டினத்திற் கருகேயுள்ள பிரஞ்சுப்பேட்டை என்னும் இடம் யாருடையது? பிரான்சியரினதா? பிரிட்டிஷாரினதா? இருவரும் தனித் தனி தமதேயென்கின்றனர். இப்பிரச்சினையைச் சர்வதேசசங்கத்து நீதிஸ்தலம் இன்னும் சிலகாலத்தில் தீர்த்துவைக்கும் என நம்பப்படுகிறது.

---

### காங்கிரஸிற்கு ஆதரவு

சென்னை சட்டசபையில் டாக்டர் சுப்பராயனைத் தலைவராகக்கொண்ட ஐக்கிய தேசியக் கட்சியினரின் கூட்டமொன்று சென்றவாரம் சட்டசபைக் கட்டடத்தில் அக்கட்சியினர் அறையில் நடந்தது. இக் கட்சியைச் சேர்ந்த அங்கத்தினர்கள் காங்கிரஸ் கட்சியில் சேர்ந்துவிட்டனர். காங்கிரஸ் பிரமாணத்தில் இவர்கள் கையெழுத்தும் போட்டுவிட்டனர் இக் கட்சியைச் சேர்ந்த மற்றுஞ் சிலரும் சீக்கிரத்தில் கையெழுத்திட்டுச் சேருவார்களென்று தெரிகிறது.

ஜஸ்டிஸ் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த ஸ்ரீமான் வேணுகோபால் நாயுடுவும் காங்கிரஸில் சேர்ந்திருக்கிறார்.

டாக்டர் சுப்பராயன் கட்சியைச் சேர்ந்த ஸ்ரீமான்கள் காடிமுத்துப்பிள்ளையும் மாணிக்கவேலு நாயக்கரும் சீக்கிரத்தில் காங்கிரஸில் சேர்ந்துவிடுவார்களென்று தெரிகிறது.

# ருஷியாவுக்கு வெள்ளையர் உதவி!

## ஜப்பானுக்கு எதிராக யுத்தக் கிளர்ச்சி. ருஷியாவுக்கு இங்கிலாந்தின் உறுதி.

## யுத்த தேவைகட்கு அமெரிக்கா பொறுப்பு அமெரிக்கா—ஜப்பான் சமரச முயற்சி?

சோவியத்துக்கும் ஜப்பானுக்கும் யுத்தம் ஆரம்பிக்கும் நிச்சயத்தைப் பற்றி டோக்கியோவிலும், ஹார்பினிலும் வதந்திகள் உலவுகின்றன.

ஆசியாவின் நிலத்தில் ஜப்பானிய செல்வாக்கு பரவுவதைத் தடுப்பதற்கு பிரிட்டனும் அமெரிக்க ஐக்கிய நாடும் ஒன்று சேர்ந்து நடவடிக்கை எடுக்கத் தீர்மானித்திருப்பதாக ஜப்பானில் வதந்தியுலவுகிறது.

ஜப்பானுடன் நீண்டகாலம் சண்டை ஏற்படுவதற்காக ருஷ்யாவுக்குப் போதிய நிதியைக் கொடுக்க பிரிடன் உறுதி கொடுத்திருப்பதாகவும் சோவியத்படைகளின் யுத்த தேவைகளை அமெரிக்க ஐக்கிய நாடுகள் பூர்த்திசெய்துவைக்க வாக்குறுதிகொடுத்திருப்பதாகவும் அறிக்கை செய்யப்படுகிறது.

### ராஜீய உடன்படிக்கை

நீர்க்க ரேகை 180 முதல் கிழக்கேயுள்ள பஸிபிக்கின் பகுதியில் ஜப்பான் நிர்வகிக்கவும், மீதியான அந்த நீர்க்க ரேகையிலிருந்து மேற்கேயுள்ள பஸிபிக்கில் அமெரிக்கா நிர்வகிக்கவும் ஏற்படக்கூடிய ஒரு ராஜீய உடன்படிக்கையை முடிக்கும் நோக்கத்துடன் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் இலாகாவோடு பேரம் பேசும்படி வாஷிங்டனிலுள்ள ஜப்பானியத் தூதருக்கு ஜப்பானிய அந்நியநாட்டு மந்திரியாகிய மிஸ்டர் ஹிரோட்டா எழுதியிருப்பதாக டோக்கியோவிலிருந்து வந்த ஒரு அறிக்கை கூறுகிறது.

---

### 107 வயதடைந்த பெண்

விஸ்லாந்து நாட்டுத் தலைப்பட்டினம் ஹெல்ஸிங்வோர்ஸில் பூ வியாபாரஞ் செய்யும் மேரி அண்டர்சன் என்ற மூதாட்டி தனது 107 வது பிறந்த நாளைச் சமீபத்தில் கொண்டாடினாள். அவளே அந் நகரில் வயது முதிர்ந்த ஆள். இவ்வளவு வயதாகியும் இன்னும் அவளே தன் வீட்டு வேலைகள், சமையல், கடைக்குப் போதல், துணிதோய்த்தல் முதலியவற்றைச் செய்து வருகிறாள்.

---

### தங்கப்பவுண்

நேற்றைத்தினம் தங்கப் பவுண் ஒன்றின் விலை 22 ரூபா 50 சதமாயிருந்தது.

---

### கூடாரங்கள் ஆகாது.

வாக்குச்சம்மதம்போடும் இடங்களுக்கு அருகே அபேட்சகர் கூடாரங்களோ, பந்தர்களோ நிறுவக்கொண்ணாதென ஓர் உத்தரவு அதிகாரிகளினால் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

---

### ஆஸ்திரேலிய மந்திரி விஜயம்.

ஆஸ்திரேலியாவின் வர்த்தக மந்திரியான அதி கௌரவ டக்டர் ஏர்ல் பேஜ் என்பவர் வருகிற 26-ந் திகதி கொழும்பிற்கு வருவார். அப்போது அவர்க்கு ஓர் வரவேற்புபசாரம் அளிக்க ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

---

### புகைரதப்பகுதியின் நட்டம்.

புகைரதப்பகுதியினால் ஏற்படும் அபரிமிதமான நட்டத்தை எவ்வாறு சமாளிக்கலாம் என்பதைப்பற்றி இலங்கை மந்திரசபையினர் ஆலோசித்துவருகின்றனர். இதுவிஷயத்தில் ஓர் நிபுணரை யழைத்து அவரைக்கொண்டு இப்பகுதியைப் புனருத்தாரணம் செய்யவேண்டும் என மந்திரசபையினர் சிபாரிசு செய்கின்றனர்.

### இலங்கையின் வரவு செலவு.

இலங்கையின் வருமானம் மட்டமாயே இருக்கிறது; ஆனால் செலவோ ஏறி ஏறிக்கொண்டே வருகிறது. மலேரியா நிவாரணம் முதலாம் பல அவசிய கருமங்கள் இன்னும் ஆற்றப்படவேண்டியிருக்கின்றன. ஆனபடியால் அவசியமற்ற செலவுக் கேதுவான வேலைகளைத் தற்காலிகமாக நிறுத்துதல்வேண்டும் என மந்திரசபையினர் அபிப்பிராயப்படுகின்றனர்.

---

### லண்டன் காங்கிரஸ் தலைவர் அபிப்பிராயம்.

கிரேட் பிரிட்டன் இந்திய தேசியக் காங்கிரஸ் கிளை ஸ்தாபனத்தின் தலைவராகிய டாக்டர் சையத் மகமூது ராய்ட்டர் பிரதிநிதி பேட்டி கண்டபோது அவர் சொல்லியதாவது:-

"பண்டித ஜவஹர்லால்நேரு லக்ஷ்மணபுரி காங்கிரஸ் மகாநாட்டிற்குத் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டிருப்பது குறித்து நாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம், இந்தியாவின் சுயேச்சைப்போரில் பண்டித நேரு மகத்தான தியாகங்களைச் செய்திருக்கின்றார். இதற்குரிய கௌரவம் அவருக்குத்தான் செல்லுகின்றது.

மிகவும் கஷ்டமான இக்காலத்தில் சுறுசுறுப்பும் திறமையும் வாய்ந்த ஓர் தலைவர் அவசியம். அப்பதவிக்கு பண்டிதநேரு மிகவும்பொருத்தமான மனிதர். யௌவன இந்தியாவின் உரிமைகளை ஒப்புக்கொள்வதற்குரிய காலம் வந்துவிட்டது. பண்டிதநேரு இளைஞர்களின் உணர்ச்சியை நன்கு அறிந்திருக்கிறார்.

---

### சர்வதேச மத காங்கிரஸ்

இங்கிலாந்தில் இந்த வருஷம் நடக்கப்போகும் சர்வதேச மத காங்கிரஸில் உலகத்திலுள்ள முக்கிய மதங்கள் எல்லாம் பிரதிநிதித்தம் வகிக்கும்.

இதில் பிரிட்டிஷ் தொகுதிக்குத் தலைமை வகிப்பவர் பரோடா சமஸ்தானத்து கெய்க்வார் மகாராஜா. அவர் தான் காங்கிரஸின் நடவடிக்கைகளை வகுத்துவிட்டு சமீபத்தில் இந்தியாவிற்குத் திரும்பியிருக்கிறார்.

காங்கிரஸ் ஜூலை 6 முதல் 17-ந் தேதிவரை நடைபெறும். அதன் 20 கூட்டங்களில் 10 லண்டனிலும் 10 ஆக்ஸ்போர்டிலும் நடைபெறும்.

தென்னாபிரிக்கா அரசியல்வாதி ஜெனரல் ஸ்மட்ஸ் அந்த காங்கிரஸிற்கு அனுப்பியிருக்கும் பிரத்தியேக செய்தியில் பின்வருமாறு கூறுகிறார்.

"மிகவும் கவலைக்கிடமான, அபாயகரமான காலத்தில் காங்கிரஸ் கூடுகிறது. உலகத்திலுள்ள மக்களுக்கிடையில் அமைதியையும் சமாதானத்தையும் நிலைநிறுத்தும் என்று எதிர்பார்க்கிறேன்."

---

### 8,000,000,000 பவுண். உலகங் கொடுக்கும் வரி.

நியூயார்க்:- உயர்ந்த வரியைப் பற்றிப் புகாரிடும் ஜோர்ட்டிஷார்கள், உலகத்தின் மொத்த வரி 8,000,000,000 பவுனென்றிருப்பதில் சிறிது ஆறுதலடையலாம்.

அமெரிக்க வரியைப்பற்றிய 18 உத்தியோகத்தர்கள் ஒரு கூட்டத்தில் நீண்ட விவாதம் செய்த பிறகு உலகத்தின் மொத்த சொத்து 8,000,000,000 பவுனென மதித்தனர். உலகத்தின் மொத்தவரிப்பழுவை 8,000,000,000 பவுனென அவர்கள் கணக்கிட்டனர்.

# கரையூர்க்கன்னிகை கடத்தப்பட்டாள்?

## இரவு முழுவதும் மோட்டார்ப் பிரயாணம். ஐவர்க்கெதிராக நீதிஸ்தலதில் வழக்கு.

## 13வயதுச் சிறுமியின் சாட்சியம்.

(நமது நிருபர்)

கரையூரில் வசிக்கும் அந்தோனி மகள் தெரேஸ் அம்மா என்னும் 13 வயதுச் சிறுமியைச் சட்டவிரோதமாகக் கடத்திச்சென்றனர் என அவ்வூர் (1) ரேசமமா (2) தாவீது (3) பத்தியநாதன் (11) மரியா (5) பஸ்தியாம்பிள்ளை என்னும் இவர் யாழ்ப்பாணம் பொலிஸ் நீதிஸ்தலத்திற் சென்ற செவ்வாய்க்கிழமை குற்றம் சாட்டப்பட்டனர்.

கடத்தப்பட்ட தெரேஸ் அம்மா என்னும் சிறுமி பின்வருமாறு நீதிபதிக்குக் கூறினள்:—

"எனக்கு இப்போது வயது 13. எனக்குத் தாய் இல்லை: எனது மாமனாராய சந்தியாவீட்டில்என்னை என் தகப்பனர் விட்டார். ஒரு வருஷ காலமாக நான் எனது மாமனர் வீட்டில் வசித்துவருகிறேன்.

"சென்ற 13ம்தேதியிரவு 8மணியளவில் மாமனரும், மற்றும் வீட்டுக்காரரும் அயல் வீட்டுக்கு ஏதோ கருமார்த்தமாகச்சென்றுவிட்டனர். அப்போது தாவீதும் மனைவி ரேசம்மாவும் வந்து என்னை என் தந்தையிடம் கூட்டிச்செல்வதாகச் சொல்லினர். இவர்கள் என் சுற்றத்தவ ராகையினல், இவர்கள் வார்த்தையை நம்பிப் புறப்பட்டேன. இவர்கள் என்னைக் கொஞ்ச இடம் கூட்டிச்சென்று அப்பால் வேருேர் பாதையால் அழைத்துச் சென்றனர்.

"சிறிதுநேரம் செல்ல இவர்கள் என்னைப் பத்தியநாதன் வீட்டில் விட்டனர். அந்த வீட்டிலே வஸ்தியாம்பிள்ளை, சின்னத்துரை, மரியா, ஆகியவர்கள் இருந்தனர். இவர்கள் வசம் என்னை ஒப்புவித்து ரேசம்மாவும் தாவீதும் சென்றுவிட்டனர்.

"பின்னர் ஒரு கார் வந்தது. சின்னத்துரை என்னைத் தூக்கிக்கொண்டு அந்தக் காரில்போட்டார். அப்போது நான் சத்தமிடாதபடி பஸ்தியாம்பிள்ளை எனது வாயைப் பொத்திப்பிடித்தார். அந்தக் காரிலே நானும் மரியாவும், பத்தியநாதனும் வஸ்தியாம்பிள்ளையும் பிரயாணம் செய்தோம்.

"இதன்பின், நாங்கள் ஆறுமுகத்தான் என்பவனுடைய வீட்டிற்கு வந்தோம். அங்கே என்னைப் பத்திய நாதனுடன்விட்டார்கள்; இரவு முழுவதையும் அங்கேயே கழித்தோம். மறுநாட்காலை நானும் பத்தியநாதனும் மோட்டர்ச் சாரதியுமாகப் பத்தியநாதனுடைய வீட்டுக்கு வந்தேம். கொஞ்சநேரத்தின்பின், அடுத்த மரியா வீட்டில் அவர்கள் கட்டளைப்படி போய் நின்றேன்."

இதன்பின் ஜோவான் சந்தியா பின்வருமாறு சாட்சியம் கூறினன்:-

"நான் திரேசம்மாவின் தகப்பனுடைய சகோதரியை விவாகம் செய்தேன். திரேசம்மா எனது மருமகள்; அவள் என்னுடன் தான் சென்ற ஒருவருஷகாலமும் இருந்தவள். நாங்கள் இச்சம்பவம் நடந்த தினத்தில் அந்த நேரத்தில் சந்ஜேன்ஸ் வீட்டிலிருந்து கணக்குப் பார்த்தோம். அங்கு நின்று இரவு ஒன்பது மணியளவில்தான்நாங்கள் வீட்டுக்கு வந்தோம் அப்போது வீட்டில் பிள்ளையைக் காணவில்லை. நாங்கள் தேடினேம். மறுநாள் காலை இச்சம்பவத்தைப்பொலிசருக்கு அறிவித்தோம்." இத்துடன் வழக்கு வருகிறமாதம் 10ம் திகதிக்குத் தவணையிடப்பட்டது.

### கள்வனுக்கு 6 மதச் சிறை

சென்ற 18-2-36 செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் பொலிஸ் கோட்டில் மயில்வாகனம் கைம்பெண் செல்லம்மாவிடமிருந்து ஒருசோடி காப்பைச் சென்ற 4-12-35ல் களவாடிச் சென்றதாகத் திருக்கோணமலையில் உள்ள சின்னத்தம்பி கந்தையா (அப்போது செல்லம்மா வீட்டில் வேலைகாரனக இருந்தவன்) குற்றஞ்சாட்டப் பட்ட வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு எதிரி முன்னும் மூன்றுமுறை மற்றுங் குற்றமும் விதிக்கப்பட்டிருந்தமையால் 6 மாதக் கடூழியச்சிறை விதிக்கப் பட்டான்.

# 101வயதில் வாலிபம்.

## 12மனைவியர்; 36பிள்ளைகள்;! வெலிகமத்து முஸ்லீம்வைத்தியர் வைபவம்.

## மகமது மொய்தீனின் அபாரசக்தி.

வெலிகமப்பகுதியிலே மீரான்மொய்தீன் மகமதுமொய்தீன் எனனும் முஸ்லிம்வைத்தியர் ஒருவர் இருக்கிறர்; இவர் 1835-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 19உ பிறந்தவர்' எனவே அவர்க்கு இப்போது ஏறக்குறைய 101வயதாகிறது.

மகமதுமொய்தீன் இப்போது 10௦வயதிற்கு மேலாயும் கட்புலன் குன்றது, கண்ணுடிஉதவியின்றியே கோரான்வாசித்தல், பத்திரிகைபடித்தல் கடிதம் எழுதுவது முதலாம் கர்மங்களைப்புரிந்து வருகின்றனர்; மூக்குக்கண்ணுடியணிபவர்களை நோக்கி அவர் அருவருப்படைகிறர்.

அவரைப்பார்க்கும் எவரும் அவர் 50 வயதுடையவர் என்றேகூறுவர்; அவர் தேகம் கூறது கெம்பீரமாய் இப்போதும் மிகவும்திறமையுடன் தம்வைத்தியத்தொழிலைப் பார்த்துவருகிறர்.

மகமதுமொய்தீன் எல்லாமாக 12மனைவியரை விவாகம்செய்து 17புதல்வரையும் 19புதல்வியரையும் பெற்றிருக்கிறர்.

அவர்தமது முதல் மனைவியை யாழ்ப்பாணத்திலேயே விவாகம் செய்தவர் 2ம், 3ம், மனைவியரைப் புளிமோட்டையிலும், 4வது மனைவியைத் திருக்கோணமலையிலும் 5வது மனைவியை நிலாவெளியிலும் வேதுமனைவியை குச்சாவடியிலும் விவாகம் செய்தவர்; 8ம், 9ம், 10ம், 11ம் மனைவியரை அவர் வெலிகமத்திலேயே மணம் செய்தவர். இப்போதுள்ள மனைவியின்வயது 35; இவர் கொழும்பில் உள்ளவராகும்.

மகமதுமொய்தீன் இப்போது வெலிகமத்திலேயே வசிக்கின்றர். அவரின் செல்வாக்கு அங்கே அதிகம்.

### கொழும்பில் தொற்றுநோய்.

கொழும்பிலே சென்றவாரம் 46பேர் கொப்புளிப்பான் நோயினல் வருந்தினர் என்று ஓர்அறிக்கை கூறுகிறது.

# ஆங்கிலமொழி வேண்டாம்.

## ஸ்ரீமதி ஜக்லூல் பாஷாவின் செய்தி

## எகிப்தில் சுதந்திரக் கிளர்ச்சி.

சமீபத்தில் எகிப்தில் நடைபெற்ற மாணவர்களுடைய கிளர்ச்சியில் மாணவிகளும் அதிகமாகக் கலந்துகொண்டனர். அம்மாணவிகளுக்குக் காலஞ்சென்ற எகிப்தின் பிரபல தலைவர் ஜக்லூல் பாஷா அவர்களின் மனைவியார் ஸ்ரீமதி ஜக்லூல் பாஷா பின்வரும் செய்தியை அனுப்பியிருந்தார்.

'பிரிட்டிஷ் சம்பந்தமான எல்லாவற்றையும் நான் பகிஷ்காரம் செய்கிறேன். அந்த ஆங்கிலப் பாஷையையும் கூட நான் பகிஷ்காரம் செய்ய விரும்புகிறேன். எகிப்தின் சுதந்திரத்திற்காகப் போராடும் ஆண்மக்களுக்கு நாம்பின்னலிருந்துகொண்டு ஊக்கமளிப்போம். எங்களுடைய ஆன்ம சக்தி அவர்களிடையிருந்து அவர்களை வெற்றிகொள்ளுமாறு செய்யும்படி எங்கள் உணர்ச்சிகளையும், ஆன்ம சக்தியையும் அவர்கள்பால் செலுத்துகிறோம்.

"பிரிட்டிஷாருக்கு எதிராகநீண்டகாட்களுக்கு முன்னரே கலகம் ஏற்பட்டுவிட்டிருக்கும் மாணவர்கள் அப்போதே கொதித்துக் கொண்டிருந்தனர். ஆனல் என்னுடைய முயற்சியாலும் இதர எகிப்தியத் தலைவர்களுடைய முயற்சியாலும் கலகம் நேராமல் தடைசெய்யப்பட்டது; பிரிட்டிஷ் அரசினர் நமைத் திணற வைத்துவிட்டனர்; நம்மை வெறும் அடிமைகளாக ஆக்கி வைத்துவிட்டனர்.

"பிரிட்டன் நமக்குஇன்னம் அதிகச் சுதந்திரமுள்ள நிர்வாகத் திட்டத்தைக் கொடுக்குமென்று நம்பியிருந்தோம்; ஆனல் பிரிட்டிஷ் அரசினர் போக்கைப் பார்த்தால், இப்போது அப்படி எண்ணவும் முடியவில்லை. பிரிட்டிஷ் மந்திரிகளின் பேச்சுக்கள் அந்த அரசினரின் மனப்பான்மையை நன்கு விளக்கி வைத்துவிட்டன, எனவே போராட்டத்தைத் தவிர்த்து நமக்கு வேறு வழி கிடையாது."

[இந்த அம்மையார் தீவிர தேசியவாதி. எகிப்திலுள்ள எல்லாக்கட்சித் தலைவர்களுக்கும் இவர்பால் சதர்த மதிப்புண்டு. இவருக்கு 70 வயதாகிறது. எகிப்தின் தேசியக் கட்சியாகிய வப்துக் கட்சியின் உயிர்நாடி போன்றவர்.]


### தேவை.

தமிழில் கெதியாகவும் நல்லெழுத்தாகவும் எழுதக்கூடிய ஒரு லிகிதர் தேவை. தமிழ் 7ம் 8ம் வகுப்பிற சித்திபெற்ற மாணவராகவுமிருக்கலாம். நல்லொழுக்கமும் நம்பிக்கையுமுடையவராயிருத்தல் வேண்டும். ஆரம்ப வேதனம் மாதம் 10 ரூபா. வருடந்தோறும் வேதனம் அதிகரிக்கப்படும். விரும்புவோர் 28—2—36 க்குள் தங்கள் சொந்தக் கையெழுத்தால் விண்ணப்பித்துக் கொள்ள வேண்டும்.

மானேஜர்,
சோதிடப்பிரகாச யந்திராலை.
கோக்குவில்.

Mis 277. 20&24-2-36.

### விளம்பரம்.

கீழேகுறிக்கப்பட்டமரங்கள் பிரசித்தஏலத்தில் யாழ்ப்பாணம் உதவிவனபரிபாலனைவர்களால் யாழ்ப்பாணம்மரக்காலையில் 1936ம் ஆண்டு பங்குனிமாதம் 10ந்திகதி செவ்வாய்க்கிழமை காலை 9-30மணிக்கு விற்கப்படும்.

Lot I. 50 பாலை மரங்கள்
Lot II. 10 முதிரை மரங்கள்

ஏனைய விபரங்களை யாழ்ப்பாணம் உதவி வனபரிபாலன ரவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

1 கன அடிக்கு 25 சதத்திலிருந்து 1 ரூபா வரைக்கும் வழக்கமானவிலையிலிருந்துகுறைக்கப்பட்டிருக்கின்றது.

A. B. Lushington
வனபரிபாலர்,
வனபரிபாலனைதலைந்தோர்,
கொழும்பு. 10-2-1936.

G 63 20 2 36.


# பச்சையா? சிகப்பா?

## மயானகாவலன் கொண்ட ஆத்திரம்! மாலை நேரத்திற் கோடரிப் பிடியால் அடி!

## வண்மேற்கில் இருவர்க்குக் காயம்.

(நமது நிருபர்)

யாழ்ப்பாணம் தென்மராட்சித் தேர்தல் அமளி, வண்ணர்பண்ணைப் பகுதியிற் சென்ற செவ்வாய்க்கிழமை பினனேரம் 4 மணியளவில ஓர் அடிபிடியில் முடிந்தது என்று அறிகிறேம்.

வண் மேற்கு சேம்பையன் மணல் மயானகாவலன் சின்னத்தம்பி என்பவருடன், ஓட்டுமடத்தடியில் சுருட்டுக்கோடா தயாரிக்கும் மு இளையதம்பி என்பவரும் நாகன் ஆறுமுகத்தான் என்னும் பள்ளகுல வாலிபனும் தேர்தல்விஷயமாகச் சம்பாஷித்துக்கொண்டு நின்றனரெனத் தெரிகிறது. மயானகாவலன் சிவப்புக்கும், மற்றைய இருவரும் பச்சைக்குமாகப் பேசி வாதிடும்போது பின்னையோர் இருவரும் மயானகாவலனைக் கேலிசெய்தனரெனத் தெரிகிறது. இதனல் ஆத்திரங்கொண்ட மயானகாவலன் ஓர் கோடரிப்பிடியினல் இளையதம்பிக்கு அடித்தாரெனவும் அதன் பயனகப் பின்னையவர் காயமடைந்தார் என்றும், ஆறுமுகத்தானுக்கும் காயமேற்பட்டு அதிகாரிகளால் அழைத்துச் செல்லப்பட்டாரென்றும் மயானகாவலன் சிறையாக்கப்பட்டானென்றுந் தெரிகிறது.

### சூதாடியவர்க்கு அபராதம்.

யாழ்ப்பாணம் பொலிஸ்கோட்டில் கரையூர்வாசிகளாகிய (1) சின்னையா (2) மைக்கல் (3) சந்தியான (4) அந்தோனி (5) சில்வெஸ்ரர் (6) தம்பித்துரை (7) பத்தியநாதன் (8) மனுவல் (9) ஆசை (10) சின்னப்பு (11) நந்தன் (12) அந்தோனி ஆகிய பன்னிரண்டு பேரும் பொதுவிடமாகிய கரையூர் ஒழுங்கை ஒன்றில் சூதாடியதாக (பேபி என்னும் கடுதாசிவிளையாட்டு) குற்றஞ் சாட்டப் பட்ட வழக்கு 18-2-36 செவ்வாய்க்கிழமை விசாரணை செய்யப்பட்டு 6 பேர் குற்றவாளிகளான ஒப்புக்கொண்டமையால் அந்த ஆறு பேர்க்குத் தனித்தனி ரூபா 2 சதம் 50 அபராதம் விதிக்கப்பட்டது. மற்றவர்கள் எச்சரிக்கை செய்து விடப்பட்டனர்.

### வீட்டுக்கு நெருப்பு வைத்தல்

வயாவிளானில் சுதேசநாட்டிய யந்திர சாலைக்கருகில்இருக்கும் சி. செல்லப்பாவின் வீட்டுக்குச் சென்ற 20ந் தேதி ஞாயிற்றுக்கிழமை இரவு 4 மணிவரையில் ஒரு சிலர் நெருப்பு மூட்டி விட்டார்கள். அன்றிரவு மழை தூறியதனல்சாத்தை மாற்றும் பொருட்டு மண்ணெண்ணெயைத் தெளித்தே கொழுத்தியிருக்கிறர்கள் என்பதை அவர்கள் வைத்துப்போன போத்தல் பேணி முதலியவற்றிலிருந்தும், வேகமாக அக்கினி சுவாலித்து எரித்ததிலிருந்தும காணக்கூடியதாக இருந்தது. காற்றுக் காலமாயும் நித்திரை நேரமாயும் இருப்பின் வீடுகளையும் அச்சியந்திரசாலைபாடசாலை முதலியனவும் எரிந்துபோக வேண்டியதாகுமே. தெய்வாதீனமாக வீட்டுக்காரி சத்தம்பண்ணியதனல் அயலில் உள்ள பலர் வந்து ஓலைகளைப் பிடுங்கி நெருப்பை அவித்து விட்டனர் நியாயய அரசாங்க சபைத் தேர்தலின் விளைந்த பிரிவினையேயாம் என்று நினைக்கின்றேம்.

### கல்லூரிகளிற் பொலிஸ்காவல்

எகிப்திலே அரசியற் பிரச்சினைகள் சம்பந்தமாகக் கல்லூரி மாணவர்கள் இற்றைக்குச் சின்னட்களுக்குமுன் கிளர்ச்சி செய்தனர் அப்படியான கிளர்ச்சிகள் தொடங்கி இனிமேலும் பரவாவண்ணம், அரசினர் கல்லூரிகள் ஒவ்வொன்றிலும் பொலிஸ்காவல் வைக்க ஏற்பாடு செய்திருக்கின்றனர்.

### ஜப்பான்—ஜேர்மன் உறவு

ஜப்பானுக்கும் ஜேர்மனிக்கும் மார்ச்சு 1ம் தேதி முதல் ஒரு இரகசிய உறவு ஏற்பட்டு 3 வருஷம்வரை நீடித்திருக்கும் என்று அறியப்படுவதாக ஒரு அந்நிய அறிக்கை பகர்கிறது.

ஹெர் ஒட்டோவி கிப் என்பவரின் தலைமையில் கீழ் நாடுகளுக்கு வந்த ஒரு ஜேர்மனியவர்த்தக தூதுக்கோஷ்டி பல வாரங்களாக ஜப்பானிலும் மஞ்சுகோவிலும் தங்கியிருந்தது குறிப்பிடத்தக்கது:

ருஷ்ய - ஜப்பானியச் சண்டை ஆரம்பிப்பது நிச்சயமாகத் தெரியும். மஞ்சுகோவில் ஜப்பானிய யுத்த ஏற்பாடுகள் துரிதமாய் நடந்து வருவதைப்பற்றி ஹார்பினிலிருந்து செய்திகள் வருகின்றன.

### மனைவியின் மாறு அன்பு.

ஆமதபாத்தில் அம்பாலா ஜில்லாவைச் சேர்ந்த சிக்ரோடி என்னும் கிராமத்தில் ஒருமாது உடன்கட்டை ஏறி விட்டதாக ஒரு செய்தி எட்டியிருக்கிறது.

இக்கிராமத்து ஜமீன்தார் சமீபத்தில் தமது 70 வது வயதில் மரணமானர். உடனே அவர் மனைவியாகிய குறிப்பிட்டமாது, குடும்பத்தார் எவ்வளவு சொல்லியும் கேட்காமல்உடன் கட்டையேறத் தீர்மானித்து விட்டாள்.

தன் கணவனைத் தகனம் செய்யும் தினத்தன்று அவள் நல்ல ஆடை ஆபரணங்களால் தன்னை அலங்கரித்துக் கொண்டு சுடுகாட்டுக்குச் சென்றதாகவும் அங்கு பிணத்தைக் கொளுத்திய பொழுது அவளும் அதன் மேல் விழுந்து விட்டதாகவும் பிறகு அவளும் சுடப்பட்டு இறந்துவிட்டதாகவும் சொல்லப்படுகிறது.

### அன்னசிப்பழ ஏற்றுமதி.

மலேயாத் துறைமுகங்களிலிருந்து 1936 பிப்ரவரி முதலாந் தேதியோடு முடிவான வாரத்தில் ஏற்றுமதி செய்யப்பட்ட அன்னசிப் பழம் மொத்தம் 14910 பெட்டிகளில் கிரேட்பிரிட்டனுக்கு 11,223 பெட்டிகளும், ஐரோப்பாக் கண்டத்திற்கு 531 பெட்டிகளும் கனடாவிற்கு 1,085 பெட்டிகளும இதரஇடங்களுக்கு 2,06 1பெட்டிகளுமாம.

2936 ஜனவரி முதலாந்தேதி முதல் பிப்ரவரி முதலாந்தேதிவரை மொத்தமான ஏற்றுமதி 222,665 பெட்டிகள் அல்லது சராசரி வாரம் ஒன்றுக்கு 44,533 பெட்டிகள.

1935 ம் வருடத்தின்இதே காலத்திய மொத்த ஏற்றுமதி 202,537 பெட்டிகள், அல்லது சராசரி வருடமொன்றுக்கு 40,507 பெட்டிகள்.

### 21வயதுக்கு உட்பட்டவர்கள் பெற்றோர் அனுமதியின்றி கார் ஓட்டக்கூடாது.

பிரான்ஸின் மோட்டோரோட்டும் பிரச்னை சம்பந்தமாக ஆலோசித்துவரும் ஒரு சபையின் தீர்மானப்படி, 21 வயதுக்குட்பட்ட எவரும் அவரது பெற்றோர் அல்லது பாதுகாப்பாளரின் எழுத்துமூலமான அனுமதியின்றிமோட்டோரோட்டும் லைசென்ஸ் பெற முடியாதிருக்கலாம்.

இதன் காரணம், ஒரு 'மைனர்' ஓட்டும் காரால ஏற்படும் பழுதுக்கு பெற்றோரோ அல்லது பாதுகாப்பாளரோ பொறுப்பாரும்படி வந்துவிடுகிறது.

## கடிதம்

### ஊரெழுச் சைவவாலிப சங்கம்

இந்துசாதனப் பத்திராதிப
அவர்களுக்கு,

ஐயா,

தங்கள் 10–2–36 பிரசுரத்தில் "ஊரெழு சைவ வாலிப சங்க வருடாந்த மகாசபை" என்னும் தலைப்பூண்டு சில விஷயங்களைக் கடிதர் ஒருவர் எழுதியிருந்ததைப் பார்வையிட்டபோது எனக்கு மிகவும் வியப்பாயிருக்கது. இக்கடிதர் பின்வரும் வினாக்களுக்கு விடை பகருவாரா. அவையாவன:—

1. இச்சங்கம் எப்போது உற்பத்தியானது?
2. இச்சங்கந்தொடங்கியபோது இருந்த அக்கிராசனர் யார்?
3. இக்கடிதர் குறித்த கணேச வித்தியாசாலை இவர் குறித்த சங்கத்துக்கு முந்தியதா? பிந்தியதா?
4. சங்கம் முந்தியதானால் இச்சங்கம் எத்தினதி தொடக்கப் நடைபெறுகிறது?
5. இச்சங்கத்தில் ஸ்ரீ கணேச வித்தியாசாலை எப்போது கப்பெற்றது?
6. இச்சங்கத்தின் எத்திகதிக் கூட்டத்தில் பள்ளிக்கூட விஷயங்கள் பேசப்பட்டு ஆராயிசப்பட்டன? கூட்டம் எவ்விடத்தில் நடைபெற்றது?
7. இப்பள்ளிக்கூடக் கட்டிடத்துக் காகவேண்டிய பணத்தை இச்சங்கம் உதவியதா? அல்லது பரோபகாராகிய வேறவர்களா?
8. பள்ளிக்கூடக் கட்டிடந் தொடங்கியபோ திருந்த அக்கிராசனர் யார்?
9. பள்ளிக்கூடக் கட்டிடம் முடிந்தபின் பிரவேசக் கொண்டாட்டம் பகிரங்கமாய் நடந்ததா? பகிரங்க கொண்டாட்டம் நடந்திருந்தால் அத்தருணம் சபையை நடாத்தியது இச்சங்கத்தின் அக்கிராசனரா, அல்லது உபஅக்கிராசனரா, அல்லது காரியதரிசியா, அல்லவெனில் யார்?
10. இப்பள்ளிக்கூடத்தைச் சங்கமே நடாத்தவேண்டுமென்று இச்சங்கத்துக்கு ஒப்படைத்தவர் யார்?
11. தற்போது ஒரு மகாசபையைக் கூட்டினதாக அதன் விருத்தாந்தங்களைக் கரிசனையோடு பிரசுரப்படுத்த முயன்ற கடிதர் சங்கமொன்று முன்னுமிருந்து முறைப்படி அதன் வைபவங்கள் நடாத்தப்பெற்றிருக்கால் என் பத்திரிகைகளில் வெளிப்படுத்த எத்தனிக்கவில்லை

இங்ஙனம்,
ஊர்வாசி.

### மோட்டாரச் சாரதிகள் சங்கம்.

கனக்சங்கிய துரைசுவாமி, B. A. M. S. C. அவர்களைப் போஷகராகக்கொண்ட வலிகாமம் மேற்கு (திவுப்பற்று உட்பட) மோட்டாரச் சாரதிகளின் கூட்டம் வெள்ளிக்கிழமை 14-2-36 எழு மணியளவில் சுளிபுரம் விற்றோரியாக் கல்லூரி மண்டபத்தில் அரம்பமாயிற்று. அச்சமயம் திரு. M. கிருஷ்ணர் J. P., அக்கிராசனம் வகித்தனர். அவைக்கு வந்திருந்த திருவாளர்கள்: S. R. கனகநாயகமும், S. A. காசனும், V. பொன்னுத்துரையும் கூட்டத்தின் நோக்கத்தைத் தெளிவாகவும், விரிவாகவும் எடுத்துக்காட்டினர். அதற்கிணங்க மோட்டார்ச் சாரதிகளின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக, மேல் யாழ்ப்பாண மோட்டார்ச் சாரதிகளின் ஐக்கிய சங்கமொன்று நிறுவப்பட்டது. அதன்மேல் "தற்போதுமிருக்கும் சாரதிகளில் அநேகரைப் பாதித்து அவர்களை வேலையினின்று நீக்கி அபாயகரமான நிலைமைத்தை உண்டாக்கத்தவாறு சாரதிகளைத் தற்காலிகமாக வேலையினின்றும் நிறுத்தும் மோட்டார் பிரமாணங்கள் அதிக ஜாக்கிரதையுடன் கையாளப்படல் வேண்டும்", என்ற தீர்மானம் அவையோரின் ஏகோபித்த சம்மதத்துடன் நிறைவேறியது. பின்வருவோர் சங்கத்தின் காரியஸ்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்:

போஷகர்:— திரு. W. துரைசுவாமி B. A.; M. S. C.
அக்கிராசனர்:—திரு. M. கிருஷ்ணர் J. P.
உப ,, திரு. V. நாகலிங்கம் Proctor
,, ,, திரு. A. ஆறுமுகம் Proctor
,, ,, திரு. V. செல்வத்துரை, ஆயுள்வேத வைத்தியர்
காரியதரிசி:—திரு. N. கனகரத்தினம்
தனாதிகாரி:—திரு. P. வைத்திலிங்கம்.

திரு. M. K. சூரியர் அவர்கள் அக்கிராசனருக்குச் சபையாரின் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்ததன் மேல் கூட்டம் மாலை, 9 மணியளவில் பூர்த்தியாயிற்று.

### இலங்கை மிருகக்காட்சிச் சாலை.

டெகி வலையில் உள்ள மிருகக் காட்சிச்சாலை பெரும் நட்டத்தில் நடாத்தப்படுகின்றபடியால், அதனை எவ்வாறேனும் விற்றுவிட வேண்டுமென அக் காட்சிச்சாலையை நடாத்தும் கம்பனியார் தீர்மானித்திருக்கின்றனர். அதனை அரசினர் சம்பெறுவதில் விருப்பமில்லை; ஆனால் டெகிவலை நகரத்தார் அக் காட்சிச்சாலையை வாங்குசற்கு இப்போது அரசினர் உதவியை நாடுகின்றனர்.

### சேர் சாமுயல் ஹோர்.

இந்தியாமந்திரியாய், பின் பிரிட்டிஷ் அந்நியநாட்டு மந்திரியாகித் தம் பதவியினின்றும் விலகிய சேர் சாமுயல் ஹோர் பிரிட்டிஷ் பாதுகாப்பு மந்திரியாகத் தெரிவு செய்யப்படக்கூடும் என ரியூற்றர்ச் செய்தி ஒன்றினால் அறியக்கிடக்கின்றது.

### ஓவியமும் காவியமும்

2ம் பக்கத் தொடர்ச்சி

எய்தினர்க்கு மட்டுமே அன்புமருளும் உண்டாமல்லது ஒருவர் தேடிப்பெறுதல் சாலாது. ஆகலானும் அது கடாவன்று என மறுக்க.

காவியம் வல்லார்க்கு ஓவியம் வாய்த்தலும் வாய்லதோ என்பது ஒரு வினா? ஆனால் இரண்டும் ஒருவர்க்கு வாய்த்தல் இயற்கைக்கு மாறுபடாது மற்று, ஒன்று வாய்ப்பெற்றார்க்கு மற்றொன்றில் ஊக்கம் உண்டாதல் இல்லை. என்றாலும் ஓவியத்தில் எழில் நலத்தைச் செய்யுள் வல்ல புலவர் எளிதில் கூர்ந்தறிய மாட்டுவர்.

இனிக் காவியம் ஓவியம் போன்றும் ஓவியம் காவியம் போன்றும் பிரித்தறிதற்கு அருமையாய் இருப்பது மிகவும் பாராட்டத் தக்கதாம் என்பது.

—சிவதொண்டன்.

### முக்கிய அறிவித்தல்.

அரசாங்க சபைப் பொதுத் தேர்தல் சம்பந்தமான கூட்ட விவரங்கள், அறிவித்தல்கள் யாவும் இப் பத்திரிகையில் விளம்பரமாகவே பிரசுரிக்கப்படும். இவ் விளம்பரங்களுக்கான விகிதம் வருமாறு:

| | | |
|---|---|---|
| ஒருமுறைக்கு ஒருபந்தி (கலம்) | ரூ. | 10-00, |
| ,, அரைப்பந்தி | ,, | 5-50. |
| ,, கால் பந்தி | ,, | 3-00. |
| , 1 அங்குலம், | | -75. |

விளம்பரக் கிரயம் முற்பணமாகவே இறுக்கப்படல்வேண்டும். இவ் விளம்பரங்கள் மானேஜருக்கே அனுப்பப்படல் வேண்டும்.

மானேஜர்
இந்துசாதனம்,


### சாலாமிஸ்திரி லேகியம்.

இந்த லேகியத்தை யான் அநேக பேருக்குச் செய்து கொடுத்துப் பலவியாதிகளைக் குணப்படுத்துவதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுபதிகளையும் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலக நன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனாலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக் கருதியே இப்போது இந்த லேகியத்தைப் பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்திரி, குங்குமப்பூ, சலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாகா, பிதாறு, சாலா முஸ்லி, சப்பேமுத்ஸலி, பிஸ்தாஸ், சார்ப்பருப்பு, பாதம் பருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளி விதை, நாகப்பூ, வங்கபஸ்பம், அரக்கபஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்தசெந்தூரம், சாம்பிராணிபதங்கம் இன்னும், அநேகபுஷ்டியான மூலிகைவகைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது.

இதனால் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒருவருஷத்திற்குள் உண்டாயிருக்கும் பக்கவாயு, இருமல், காசம், பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால்காந்தல், வலி, இடுப்புவலி, பக்கவாயு இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்தலேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லிய வியாதிகள் குணமடைவதுடன் சூதகவாய்வு, பிரசவஅறையில் உண்டாகும் நோய்கள்தீர்ந்து தேகபுஷ்டியும்பலமும் பெறுவார்கள். பால்விருத்தியாகும்.

இந்த லேகியத்தின் விலை ருத்தல் ஒன்றுக்கு ரூபா ௨0. அரை ருத்தலுக்கு ரூபா பத்து. கால் ருத்தலுக்கு ரூபா ௫. தபாற்செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர்பினுக்கு முதலிய தொடுவாயிராச்சியப் பகுதிக்கு வி. பி. சட்டம் இல்லாததனால் முன் மணிஆடர் அனுப்புதல்வேண்டும்.

இங்ஙனம்,
க. ஆறுமுகம்பிள்ளை,
வெருான் ஆரோக்கிய சுகாதார வைத்தியசாலை,
காத்தான்குடி போஸ்டு,
மட்டக்களப்பு.
Y55 1-1-34 to 31-12-36) சிலோன்.



## திருநெல்வேலி ஒற்றுமை நிதி,

(வரைவுளது)

அதிகாரம் பெற்ற மூலதனம் ரூபா 500,000.

ஒன்று 25சதமாக 80 மாதங்கள் செலுத்திரூபா 25ம்ஆதாயமும்பெறலாம்

தனிகத்தொழிலும் உணவுப்பொருள் வியாபாரமும் திருநெல்வேலியில் இலாபகரமாய் நடக்கின்றன.

வேண்டிய இடங்களில் கிளை ஸ்தாபனங்கள் திறக்கப்பெறும்.

தேசிய கருமங்களை வளர்ப்பதால் சுயேச்சைபெற முடியும். ஆதலால், முதலை வளர்த்து வேலையளித்து, கைத்தொழிலை உயிர்ப்பிக்கும் நோக்கங்கொண்ட இந்நிதியை ஆதரியுங்கள்!

இலகுவான முறையில் இறுக்கக்கூடிய கடன்கள் கொடுக்கிறோம்.

உயர்ந்த வட்டி விகிதங்களோடு தவணைக்கும் நிபந்தமாயும், சம்பாத்தியத்திலும், நடைக்கணக்கிலும் பணம் ஏற்றுக்கொள்ளோம்.

பங்குகளுக்கு முந்துங்கள்!!

கைராட்டினத்தில் நூற்ற நூலும், கைத்தொழில் பொருளும் சந்தாவுக்கு ஏற்றுக்கொள்ளுவோம்.

வ சோமசுந்தரம்,
காரியாதிகாரி.

(Y. 189. 1-11-35 to 31-10-36.)



## கொய்லன் வங்கி (லிமிற்றெட்)

(1919-ம் ஆண்டு திருவாங்கூரிற் பதிவுசெய்யப்பட்டது)

## யாழ்ப்பாணம்.

காலங் குறிக்கப்பட்ட வைப்புப்பணம்
(FIXED DEPOSITS)

எங்கள் வங்கியில் சேமிக்கும்படி தரப்படும் வைப்புப்பணத்திற்குப் பின்வரும் விகிதமான வட்டி கொடுக்க நிர்ணயஞ் செய்திருக்கிறோம்.

| | | |
|---|---|---|
| 6 மாச காலம் | 3½ | விகிதம் |
| 12 மாச காலம் | 4½ | விகிதம் |
| 24 மாச காலம் | 5 | விகிதம் |

ஏனைய விபரங்களை எங்களிடம் வினவியறிந்துகொள்ளலாம்.

V. C. ஓமன் B. A.
யாழ்ப்பாண ஏஜன்ற்

Y. 71 23-5 to. 22-5-36



கோடைகாலத்திற் பீடிக்கும்

தலைவலியைத் தடுப்பதற்காக

ஒரு போத்தல்

## லிட்டில்ஸ் ஓரியண்டல்பாம்

## தைலத்தை

வாங்கி வைத்திருங்கள்

இந்தியாவில் சிறந்ததும் முதன்மையானதும்

இது வே.

Y 53. 1-1—31-12-36)



## மருந்துச் சரக்குகளின் விளம்பரம்

இத்தாற் சகல வைத்தியர்க்கும், மருந்துச்சரக்கு வியாபாரிகட்கும் தெரிவிப்பதாவது:—இப்போது பெரியகடை மார்க்கட்டுக்கு வடக்குப் பக்கத்திலிருக்கும் சே. சிவக்கொழுந்து அவர்களின் மருந்துச்சரக்குக் கடையிலும், நல்லூர்வடக்குச் சட்டநாதர் கோயிலடியிலிருக்கும் மேற்படியாரின் மருந்துச்சரக்குக் கடையிலும், கஸ்தூரி, கோரோசனை, குங்குமப்பூ, காண்டாமிருகக்கொம்பு, சுத்தமான சிப்பி முத்தும் அடியிற் குறிப்பிட்டிருக்கும் விலைக்குப் பெற்றுக் கொள்ளலாம்.

| | களஞ்சு ஒன்றுக்கு | தோலா ஒன்றுக்கு |
|---|---|---|
| 1-ம் நம்பர் கஸ்தூரி | 20—00 | 40—00 |
| ,, கோரோசனை | 3—00 | 7—00 |
| ,, குங்குமப்பூ | —50 | 1—20 |
| ,, முத்து | 14—00 | 32—50 |

1- நம். காண்டாமிருகக் கொம்பு களஞ்சுஒன்றுக்கு சதம்—50
ருத்தல் ஒன்றுக்கு ரூபா 40

மேலே சொல்லப்பட்ட சரக்குகள் எல்லாம் முதல்தரமான நல்ல சரக்குகளே; எங்களிடம் நேரில் வந்து பார்த்துக்கொள்ளலாம். இன்னும் சுருள்தங்கம், புனுகு, பச்சைக்கற்பூரம், ஜவ்வாது, அரைத்த சந்தனம், சந்தணக்கட்டை, சந்தணவில்லை சாம்பிராணி பதங்கம், தைலம், முதலியவைகளும், சென்ற், அத்தர் முதலிய வாசனைத் திரவியங்களும், திறமான பன்னீர் வகைகளும், அபிஷேகத் திரவியங்களும் ஓமவாட்டர், சுருட்டுக் கோடாச் சரக்குவகைகளும் பலவிதமான திறம் ஊதிவத்திகளும், மற்றும் மருந்துச்சரக்கு வகைகளும் மொத்தைக்கும் சில்லறைக்கும் சரசமான விலைக்குப் பெற்றுக் கொள்ளலாம்.

தஞ்சாவூர், மு. ஆபிரகாம் பண்டிதர் அவர்களின் சஞ்சீவி மருந்து வகைகளும், திருச்சி டக்டர் A. மகாம் அவர்களின் குரு மருந்து வகைகளும், யாழ்ப்பாணம், டக்டர் ஜே வல்லியம்பிள்ளை அவர்களின் மருந்து வகைகளும் இவ்விடத்திற் பெற்றுக் கொள்ளலாம்.

வி. பி. மூலம் பெறவிரும்புவோர், நான்கிலொருபாகத்தை முன்பணமாக அனுப்ப வேண்டும். தொடுவாய்ப் பகுதிகளுக்கு முழுவதும் முற்பணமே அனுப்பவேண்டும்.

தபால், மணிஆடர் அனுப்பும் விலாசம்,

ஆ. இராசையா,

சே. சிவக்கொழுந்து அவர்களின் மருந்துச் சரக்குக் கடை

பெரியகடைத்தெரு, யாழ்ப்பாணம்.

Q. 240 1-1-36 to 31-3-36.

## நவீனக் கல்வி முறையின் குறைபாடுகள்.

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

பாஷையிலேயே நடத்தப்பெறுகின்றன. நம்முடைய தேசத்தில் முக்கியமாக எல்லா ராஜீய காரியங்களும் இங்கிலீஷிலேயே கொண்டு செலுத்தப்படுகின்றன. நாம் அந்த பாஷையைக் கற்றுக்கொள்வது மட்டும் போதாது. நம்மை ஆட்சிபுரிகின்றவர்களைத் திருப்திபண்ண அதை எவ்விதம் உபயோகிப்பதென்று தெரிந்துகொள்ள வேண்டும். எவ்வளவுக் கெவ்வளவு நாம் அதைநன்கு உபயோகிக்கின்றோமோ அவ்வளவுக் கவ்வளவு அவர்கள் நம்மை ஏற்றுக் கொள்வார்கள். நம்முடைய தேச மக்களும் நம்மை ஏற்றுக்கொள்வார்கள்.

நம்முடைய அபூர்வ நிலைமை

நம்முடைய நிலை இவ்விதமிருக்குமளவும் கல்வியறிவாளிகள் தங்களுடைய சொந்த நோக்கங்களுக்காக இங்கிலீஷ்பாஷையைப் போதிய அளவுக்கு அதிகமாகவே கற்றுக் கொள்ளவேண்டும். வங்காளியில் பாடப் புஸ்தகங்கள் சரியானபடி இல்லாததால் இங்கிலீஷ் பாஷையிலேயே உயர்தரக் கல்வி புகட்டப்பட வேண்டுமென்பதை பலர் வெகுவாக ஆட்சேபித்தனர். அந்தத் தடங்கல் இப்பொழுது மறைந்துவிட்டது

சொந்த அநுபவம்

நம்முடைய சொந்தப் பாஷையின் மூலமாகத்தான் கல்வியைப் புகட்ட வேண்டுமென்று நான் சொல்லுவதில் என்னுடைய சொந்த அநுபவம் அடங்கியிருக்கிறது. நான் குழந்தையாயிருந்த காலையில் வங்காளி பாஷையிலேயே சகல பாடங்களையும் புகட்டிய கல்வி ஸ்தாபனமொன்று கல்கத்தாவிலிருந்தது. என்னுடைய பெற்றோர்கள் அதிர்ஷ்டவசமாக என்னை அங்கு அனுப்பினர். பூகோளம் சரித்திரம், கணித சாஸ்திரம், முதலியன வெல்லாம் வங்காளி பாஷையிலேயே போதிக்கப்பட்டன. அதன் பயனாக வங்காளிக் கல்வியிலும் வித்தையிலும் நான் தேர்ச்சி பெற்றேன்.

கல்வியின் முக்கிய நோக்கங்கள்,

பாஷையின் மூலமாக ஒருவருடைய எண்ணங்களையும், உணர்ச்சிகளையும் வெளியிடுவதற்கான பயிற்சியைப் பெறுவது கல்வியின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும். ஆரோக்கியமான மனோவாழ்வுக்கு இது அத்யாவசியம். ஒரு அன்னிய பாஷை மூலமாக அதைச் செய்ய வேண்டியிருந்தால் முகத்தில் முகமூடியணிந்துகொண்டு ஒருவர் நாடகம் நடிப்பது போலாகும். என்னுடைய எண்ணங்களையும் அபிப்பிராயங்களையும் என்னுடைய சொந்தப் பாஷையிலேயே தெளிவாக விளக்குவதற்கும், ஜோடிப்பதற்கும் தெரிந்தது எனக்குப் பெருமகிழ்ச்சியை அளிக்கிறது. தன்னுடைய தாய் பாஷையில் பூரண தேர்ச்சி பெற்ற பிறகுதான் அன்னிய பாஷையை இலகுவாகக் கற்றுக்கொண்டு அதில் நிபுணராகிவிடலாமென்ற மனோதிடமும், ஊக்கமும் நமக்குண்டாகிறது; கவியின் மனோபாவங்களை நான் எடுத்துச் சொல்லிவிருக்கிறேன். தவிர்த்து கிரியாம்சையில் கொண்டு செலுத்தக்கூடிய ஒரு யோசனையையும் நான் சொல்லவில்லையென்று வணங்கப்படத்தக்க சில ஆழ்ந்த கருத்துள்ள ஆத்மாக்கள் நினைக்கலாம் அது அவ்விதமேயிருக்கட்டும். அனுஷ்டான பூர்வமான யோசனைகள் வெறும் ஓட்டு வேலையில்தான் பயனடைந்திருக்கின்றன வென்றும், மனோபாவங்கள் தான் உயிருள்ள சிருஷ்டிகளை பண்புடையனவாகச் செய்திருக்கின்றன வென்றும் நான் அவர்களுக்குப் பதில் சொல்லவிருப்புகிறேன்.

---

வையத்துள் வாழ்வாங்கு
வாழ்பவன் வானுறையுந்
தெய்வத்துள் வைக்கப்படும்.

---

## அடைவுநகை விற்பனவு விளம்பரம்.

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கச் சட்டநிச்சட்டத்தின்படி லைசென்ஸ் பெற்று அடைவு பிடிக்கும் யாழ்ப்பாணம் வண் மேற்கு தட்டாதெரு வே. அ. சோமசுந்தரம் என்பவரிடம் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணை தப்பி அச்சட்டத்தின் 12ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கவேண்டிய நகைகளின் விபரம்.

| இ. | ரூ. | கு. | ச. | பெயர். | ஊர் | நகைகளின் விபரம் |
|---|---|---|---|---|---|---|
| | | | | 1932 ஆ ஆவணி மீ | | |
| 158 | 9 | 10 | 44 | கா. செல்லத்துரை | வண மேற்கு | கடுக்கன் 1 |
| | | | | 1932 ஆ ஐப்பசி மீ | | |
| 212 | 7 | 18 | | செ. துரைராசா | தட்டாதெரு | காதோலை சோடி 1 |
| 231 | 27 | 5 | | ம. கந்தையன் | வண் மேற்கு | அச்சரக் கூடு 1 வாழி 1 |
| | | | | கார்த்திகை மீ | | |
| 234 | 1 | 10 | | கா. பொன்னுச்சாமி | தட்டாதெரு | காதோலை சோடி 1 |
| | | | | 1933-ம் ஆ ஆவணி மீ | | |
| 337 | 19 | 6 | | க. கந்தையா | தச்சதெரு | குச்சி சோடி 1 |
| | | | | ஐப்பசி மீ | | |
| 368 | 31 | 8 | | வை. சண்முகம் | தட்டாதெரு | மட்சரக் கூடு 1 |
| | | | | 1934 ம் ஆ மாசி மீ | | |
| 479 | 24 | 25 | | கா. செல்லப்பா | தட்டாதெரு | பதக்கம் 1 |
| | | | | பங்குனி மீ | | |
| 488 | 5 | 10 | | வ. சண்முகம் | தட்டாதெரு | காதோலை சோடி 1 |
| 491 | 7 | 10 | | கா. தம்பன் | வண வடமேற்கு | காதோலை சோடி 1 |
| | | | | சித்திரை மீ | | |
| 529 | 11 | 6 | | க. ராசையா | வண மேற்கு | குச்சி 1 வெள்ளிச் சங்கிலி சோடி 1 |
| | | | | 1934 ம் ஆ ஆடி மீ | | |
| 618 | 9 | 6 | | ச. வேலுப்பிள்ளை | இணுவில் | தாலி 1 |
| 619 | 12 | 9 | | கா. சந்தையா | தட்டாதெரு | பதக்கம் 1 |
| 620 | 12 | 12 | | பொ. ஐயாத்துரை | ,, | குச்சி சோடி 4 |
| 625 | 14 | 20 | | சொ. ஐயாத்துரை | ,, | வைரமின்னி 1 |
| 629 | 16 | 20 | | ச. சின்னராசா | ,, | சடுக்கன் சோடி 1 |
| | | | | 1934 ம் ஆ ஆவணி மீ | | |
| 665 | 20 | 8 | | ப. சாதையா | நல்லூர் | மணிக்கோவை 1 |
| | | | | 1934 ம் ஆ கார்த்திகை மீ | | |
| 737 | 14 | 6 | | சி. தம்பையா | கொக்குவில் | கல்லாணி சோடி 1 |
| | | | | 1934 ம் ஆண்டு மார்கழி மீ | | |
| 767 | 11 | 8 | | கு. காசிப்பிள்ளை | இடைக்காடு | தாலி 1 |
| 771 | 12 | 7 | 25 | கா. சின்னத்துரை | கலட்டி | குச்சி சோடி 1 |
| 776 | 23 | 7 | | வ. சபாரெத்தினம் | ,, | மோதிரம் 1 |
| | | | | 1935 ம் ஆண்டு தை மீ | | |
| 784 | 1 | 20 | | க. அப்பாத்துரை | தட்டாதெரு | பொன்கட்டி 1 |

விற்பனவு:—யுவ வரு மாசி மீ 24ம் திகதிக்குச் சரியான 7 3 36) சனிக்கிழமை 10 மணி தொடக்கம் எடுக்கப்பட்ட நகை பிறநீங்கலாக மிகுதி மேற்படியாரிடத்தில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

M. S. துரை,
லெக்சின் மேன்சர்

(Mis 273. 17 & 20-2-36)

---

## அடைவுநகை விற்பனவு விளம்பரம்.

1893-ம் ஆண்டின் 8ம் இலக்கச் சட்டநிச் சட்டத்தின்படி லைசென்ஸ் பெற்று அடைவு பிடிக்கும் யாழ்ப்பாணம் கா. ச. அன்சன் அவர்கள் கடையில் அடைவுவைக்கப்பட்டு இப்போது தவணைதப்பி மேற்படி சட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்பட வேண்டிய நகைகளின் விபரம்:—

1934ம் ஆண்டு ஆகஸ்டு மாசம்.

| நா. | உ. | ரூ. | ச. | ஊர். பெயர் அடைவுபொருள் விபரம். |
|---|---|---|---|---|
| A 744 | 1 | 202 | 75 | ஐயனார்கோவிலடி மாணிக்கம்பிள்ளை செல்லத்துரை பொன் பட்டைச் சிவப்புகல் டிம்பிபதக்கத்துடன் கெட்டிப்பூரானட்டியல் 1 |
| 572 | 30 | 17 | | வண்கிழக்கு பொன்னு செல்லையா பொன் கலாவரை மோதிரம் 1 |
| | | | | செப்டெம்பர் மாசம் |
| 995 | 2 | 54 | 15 | தட்டாதெரு சொக்கலிங்கம் தம்பு பொன் செயினட்டியல் 1 |
| 1019 | 5 | 59 | 05 | வண்மேற்கு குணரத்தினம் கந்தையா பொன் அச்சுக்காப்புச் சோ. 1 |
| 1073 | 11 | 10 | 05 | வண்கிழக்கு வேலன் முருகன் பொன் சிவப்பு முத்து வெள்ளை வைத்த மோதிரம் 1 |
| 1080 | 12 | 15 | | திருநெல்வேலி பொன்னையா கனகசுந்தரம் பொன் சிவப்பு பச்சை வைத்த மாங்காய்ப் பெண்டன் 1 |
| 1119 | 15 | 70 | 05 | ஐயனார்கோவிலடி மாணிக்கம்பிள்ளை செல்லத்துரை பொன் முத்து பச்சை சிவப்பு வெள்ளை வைத்த கடுக்கன் 1. புரோச் 1 |
| 1150 | 17 | 7 | | வண்கிழக்கு சீனி அருணாசலம் பொன் வெள்ளை 2, நீலம் 1 வைத்த மோதிரம் 1 |
| 1153 | 18 | 70 | 05 | சோனகதெரு எம். எச் ஆமீது பொன் இமி கல் டிம்பி பதக்கத்துடன காபிட்பூரானட்டில் 1, கல் 1 கரையும் இல்லை |
| 1186 | 20 | 50 | 05 | வண்கிழக்கு அரு. அண்ணாச்சாமி பொன் தாயித்துடன் கைச்சங்கிலி 1, இமிவைரம் 7 வைத்த மோதிரம் 1 |
| 1243 | 26 | 10 | | ஓட்டுமடம் கார்த்திகேசு சுந்தவனம் பொன் ஆடுதன் மோதிரம் 1 |
| | | | | அக்டோபர் மாசம் |
| 1365 | 11 | 30 | | சுண்ணாகம் சி மாணிக்கத்தியாகராசா பண்டிற் பொன் கெவிரிசங்கம் 1 |
| 1453 | 22 | 660 | 05 | வண்மேற்கு இராமலிங்கம் நடராசா பொன அச்சுக்காப்புச் சோடி 2, முதிச்சக்குத்தியட்டியல் 1, கெட்டிக்கொலுசுக் காப்புச் சோடி 2, 1ல் கரையில்லை, சிவப்பு டிம்பி பதக்கத்துடன் கலட்டியல் 1 குண்டுவைத்த பதக்கம் 2, கலமோகரம் 1, அரும்பு மோதிரம் 2 தோடு சோடி 2, வைரத் தொங்கட்டான் 1, கல வரை மோதிரம் 1 |
| 1464 | 23 | 10 | | சள்ளியக்காடு வைத்தியலிங்கம் சுப்பிரமணியம் பொன் கலாவரை மோதிரம் 1 |
| | | | | நவம்பர் மாசம் |
| 1540 | 3 | 15 | | வண்மேற்கு சம்மந்தர் சோமசுந்தரம் பொன் கலாவரை மோதிரம் 1 |
| 1689 | 20 | 15 | | வண்மேற்கு பொன்னம்பலம் பொன் வெள்ளை, பச்சை, வைத்த புரோச் 1 |
| 1788 | 30 | 16 | | சுண்ணாகம் நாகர் கந்தையா பொன் வெ கல் தோடு சோடி 1 இமிக்கல் தோடு சோடி 1, கரை 1 இல்லை |
| | | | | டிசம்பர்மீ |
| 1809 | 3 | 15 | | வண மேற்கு வாலாம்பாள் கணேசன் பொன் முத்துக் கலாவரைத் தோடு சோடி 1 |
| 1855 | 9 | 20 | | வண்மேற்கு வைத்தியலிங்கம் மயிலு பொன் முத்து வெள்ளை சிவப்பு வைத்த கடுக்கன் 1க்கு கல் 1 இல்லை |
| 1865 | 11 | 7 | | சண்டிக்குளி வில்மட்சென்றிக் பொன் முத்துக் கலாவரைக் குச்சி சோடி 1, வெள்ளி வேலைசெய்த வெ கல் கடுக்கன் சோடி 1 |
| 1881 | 14 | 25 | 05 | வண்மேற்கு சின்னையா கைப்பெண் இராசாமணி பொன் இ கல் 2ம் வெ கல் 1ம் வைத்த கலாவரை மோதிரம் 1, அரும்பு மோதிரம் 3 |
| 1927 | 20 | 17 | | வண் கிழக்கு S. H. ஒறன்தின் பொன் கலாவரைக் குச்சி சோடி 1, காது முருகு சோடி 1 |
| | | | | 1935ம் ஆண்டு ஜனவரிமீ |
| 2062 | 6 | 8 | | வண் கிழக்கு வடிவேலு காயாம்பூ பொன் குண்டுவைத்த அரைப் பவுண் 1 |
| 2097 | 15 | 12 | | வண்கிழக்கு எஸ் எச் ஒறன்தின் பொன் கல்லொன்றில்லாத ஆடுதன் பென்டன் 1 |
| 2174 | 24 | 10 | | சுதுமலை இளையதம்பி செல்லத்துரை பொன் நீலக்கல் மோதிரம் 1 |

விற்பனவு: யுவ வருஷம் மாசி மாசம் 24ம் திகதிக்குச் சரியான (7-3-36) சனிக்கிழமை மாலை 2 மணியளவில் எடுபட்டநகை பிறநீங்கலாக மிகுதி மேற்படி கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

சி. ஐயம்பிள்ளை உடையார்
லெக்சின்மேன்சர்.

Mis 274. 17&20-2-36.

---


## "இரதி மன்மத"
## சுகானந்த லேகியம்.

க்ஷயம் - ஸ்வாஸகாஸம் - மேகம் - குன்மம் முதலிய கொடூரமான வியாதிகளையும், வீரியஅழிவு, மலபந்தம், அஜீர்ணம், சரீரமெலிவு, மூலஎரிச்சல் முதலிய சர்வவியாதிகளையும் போக்கி, இரத்தத்தை விருத்திப்படுத்தி, ஆண்மையூட்டி கிழவர்களுக்கும் கூட யௌவனத்தை உண்டுபண்ணிச் சுகமனுபவிக்கச்செய்வதில், இதற்கு நிகரான "சித்த" ஔஷதம் வேறுகிடையாது:—

ஓர் முறை பரீக்ஷியுங்கள்.

பூரணசுகத்திற்குப் போதுமான 40 நாட்கள் சாப்பிடக்கூடிய ஔஷதத்தின் விலை ரூபா } 4 0 0

தபால்சார்ஜ வேறு.

N. B. முழுவிவரங்களடங்கிய "ஔஷத பூஷணம்" வேண்டுபவர்களுக்கு இனமாக அனுப்பப்படும்.

விலாசம்:—

மலையாள "சித்த" ஔஷதாஸ்ரமம்,
2 மெயின்ரோட்,
கோல்லம், Quilon S. India.

H 208. 1-12-35 to 31-5 36

---

திறம் தேக்கமரம்    பவுண்மார்க் கொளுக்கி ஓடு.

மிகத்தொகையாக இப்பொழுது வந்திருக்கின்றன.
சியம் தேக்கமரங்கள் ரூபா 2-60சதந் தொடக்கம்
றங்கூன் தேக்கமரங்கள் ரூபா 2-75சதந் தொடக்கம்

### இன்னொரு பிரதான விளம்பரம்.

நாங்கள் எங்கள் காசுக்கடையில், ஈடுபிடிக்கும் நகைகள் விஷயத்தில் 100 ரூபாவிற்கும் அதற்கு மேற்பட்ட தொகைக்கும் இதுவரையிலிருந்த 12 விகித வட்டியைத் தவிர்த்து 9 விகிதமாகக் குறைத்துக்கொண்டோம் என்பதாம்.

திறமான பொருள், நேர்மையான வியாபாரம் சகாயமான விலை இவைகளில் எங்கள் கடையே பேர் பெற்றது.

பவுண் "மார்க்" ஓடுகள் விசேஷமானவை

சி. வீரகத்திப்பிள்ளை அண்டு சன்ஸ்
(Y 57. 1.5-35to30-4-36.) பெரியகடைத்தெரு, பாங்ஷல் வீதி.


---

### பத்திரக் கிரயம்.

(முற்பணமாக அனுப்புதல் வேண்டும்.)

| யாழ்ப்பாணப் பட்டினம் | தமிழ் | ஆங்கிலம் | இருபிரதிகளும். |
|---|---|---|---|
| | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. |
| (நகரசங்க எல்லைக்குட்பட்ட) | | | |
| ஒருவருடத்திற்கு | 5 - 00 | 5 - 00 | 9 - 00 |
| ½ வருடத்திற்கு | 3 - 00 | 3 - 00 | 5 - 00 |
| ¼ வருடத்திற்கு | 2 - 00 | 2 - 00 | 3 - 75 |
| இலங்கை இந்தியா | | | |
| ஒருவருடத்திற்கு | 8 - 00 | 8 - 00 | 12 - 00 |
| ½ வருடத்திற்கு | 4 - 50 | 4 - 50 | 7 - 00 |
| ¼ வருடத்திற்கு | 2 - 50 | 2 - 50 | 4 - 50 |
| சிங்கப்பூர் முதலிய அந்நிய நாடுகள் | | | |
| ஒருவருடத்திற்கு | 9 - 00 | 9 - 00 | 13 - 00 |
| ½ வருடத்திற்கு | 5 - 00 | 5 - 00 | 7 - 50 |
| ¼ வருடத்திற்கு | 8 - 00 | 3 - 00 | 5 - 00 |

தனிப்பிரதி சதம் 5

கொழும்பு தனிப்பிரதிநிதி:-

ப. மு. ரா. முத்துச்சாமி ரெட்டியார்,
"நியூஸ்மார்ட்"
89. கோவில்தெரு,
கும்பனித்தெரு.

---

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ்சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள்வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம்வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

---

Printed and Published by S. ADCHALINGAM, residing at Vannarponnai West Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabai, Jaffna at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Thursday, 20th February 1936